OMI

# அஞ்சலி

## ANJALI MAGAZINE

தீபம் ~ 02 சுடர் ~ 04 ஐப்பசி ~ மார்கழி ~ 2009

PUBLIC LIBRARY
JAFFNA
16 SEP 2011

உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை

ஆசிரியர்
அருட்தந்தை S.டேமியன்.அ.ம.தி(M.A)
ஆலோசகர் குழு
அருட்தந்தை T.எட்வின்
அருட்.சகோ.இ.செ.விஜேந்திரன்.அ.ம.தி

ஒருங்கிணைப்பாளர்
கி.துளசிதாஸ் (B.Sc)
நிர்வாகக்குழு
அஞ்சலியகப் பணியாளர்கள்.
அஞ்சலி இளையோர் சமூகம்.

## உள்ளடக்கம்

இருளகற்றும் ஒளிகளா நீங்கள்?
ஒளியாக நீ வேண்டும்
Jesus whispers
பாடசாலையின் ஆலோசனை வழிகாட்டல் திட்டத்தின் வெற்றியில் ஆசிரியரின் பங்கு
சிறுகதை
பிரியமானவளே
அவலங்கள் மத்தியில் அன்னையர்களினால் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கைகள்
நேர்காணல்
அறம்
கவிதைத் தொகுப்பு
அன்பு
புத்தகத்தைக் காப்பதெப்படி
அறிந்து கொள்ளுங்கள்
அமைதி வரும் ஆனா வராது
நான் ஒரு பறவையானால்
அன்னை ஓர் ஆலயம்
உலகியல் வாழ்வில் நின்று எவ்வாறு பற்று நீங்கி வாழ்வது?
இளைஞர் மனப்பாங்கு விருத்தி
கிறிஸ்தவ வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணிகள் நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே!
பொதுவிடயங்கள்
அமைதியின் தூதனாய்
அகதிகள் நாம்
எமக்கு மருந்தாகவும் உவாகவும் பயன்படும் காய்களும் கதிர்களும்
நுண்ணறிவுப் போட்டி

கணனி வடிவமைப்பு: கி. துளசிதாஸ் , அருட்.சகோ.இ.செ.விஜேந்திரன்.அ.ம.தி
பதிப்பகம்: M.O.P, M.M.V. Road, Nelliady.

அஞ்சலியகம்
நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

விலை 35/=

Anjali Aham
Nellanday Road,
Thumpalai,
Pointpedro,
Jaffna,
Srilanka.



PUBLIC LIBRARY
JAFFNA

This Issue of Anjali Magizine is dedicated
to You

**MOST REV.FR.WILHELM STECKLING OMI**

in honour of your Visit to Anjali Aham

PUBLIC LIBRARY
JAFFNA

# ஞானத்தின் விடியல்கள்

அன்பான வாசகர்களே! ஐப்பசி மாதத்தில் பல சர்வதேச தினங்களை கொண்டாடுகின்றோம். அவற்றின் ஒன்றுதான் முதியோர்க்கான தினமாகும். இன்று நமது நாட்டிலும் சரி, வீட்டிலும் சரி முதியோரின் நிலைமை எப்படி இருக்கிறது. கேலிக்கும், நகைப்புக்கும், ஏளனத்திற்கும் ஆளாகும் முதியோரின் நிலை என்ன? பெற்ற தாய் தந்தையை விட்டு வெளிநாடு சென்று பிறந்த வீட்டையே விற்றுக்கூறாக்கிவிட்டு வெளியில் இருக்கும் பிள்ளைகள் எத்தனைபேர் முதியோருக்குரிய கனம் பண்ணல், மதித்தல், அன்புடன் நடத்துதல் போன்ற விழுமியங்கள் மதிக்கப்படுகின்றனவா? என்பது நாம் ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய கேள்விகளாகும். ஆண்டில் வரும் முதியோர்தினத்தை மட்டும் கொண்டாடிவிட்டால் போதுமா?

முதுமை வாழ்வின் ஒரு வளர்ச்சிப் படிமுறை முதுமை என்றவுடன் நாம் வயது போய்விட்டாலும் காலம் பிந்திவிட்டு முடி நரைத்துவிட்டது தோலில் சுருக்கு ஏற்பட்டு விட்டது என்று நாமே நம் மனத்தாலே நமக்குள் ஒரு வரைவிலக்கணத்தை வரைந்து விடுகின்றோம். இதனால் உளரீதியாக நாம் முதுமை எய்தும் முன்னரே இளமையிலேயே முதுமைக்கு நாமே அத்திவாரம் போட்டுக்கொள்கின்றோம். மனம் ஒருபோதும் முதுமையடைவதில்லை. அதற்கு நேரமோ வயதெல்லையோ காலமோ இல்லை. எங்கள் மனநிலை எப்படியோ அதேபோல்தான் எமது முதுமையும்.

65, 75, 85, வயது முதுமையின் விரக்தியான வளர்ச்சியே தவிர உண்மையிலே இந்த வயதுடையோரை ஞானத்தின் விடியல்கள் என்று கூட நாம் அழைக்கலாம். மகிழ்ச்சியான பலன் தரக்கூடிய செயற்படக்கூடிய வாழ்வின் உற்பத்தியை பெருக்கி செழிப்படையும் காலம் என்று கூட நாங்கள் கருதலாம். அமைதி, அன்பு, மகிழ்ச்சி, அழகு, ஞானம், நல்லமனம் முதுமையின் பண்புகளாகும். ஒரு வேலையும் இல்லாதவன்தான் தன்வாழ்நாளை எண்ணிக் கொண்டு நாளுக்குநாள் முதுமை

நோக்கி பயணிக்கிறான்.

90 வயதில் ஈடுபாட்டுடன் செயற்பட்டார் அறிஞர் யோர்ஜ் பேனட்ஷோ, 80ல் மார்கஸ் போர்சியஸ் உரோமநாட்டு தேசப்பற்றாளர் கிரேக்கம் பயிற்றா் கிரேக்க மெய்யியலாளர் 80 வயதில் இசைக்கருவிகளை மீட்கப் பயின்றார். மைக்கல் அஞ்சலோ 80ல் தன்னுடைய ஓவியத்தின் உச்ச வரலாற்றை எழுதினார்.

எனவே எமது சமூகத்தின் மூத்த ஞானத்தின் விடியல்களை மதிப்போம். அவர்களை சமூகத்தில் உயர்த்தி, துணையாக இருந்து பணிசெய்து அணைத்து வாழ்வோம்.

2009ல் மீண்டும் ஒரு நத்தார் கிறிஸ்மஸ் உதயமாகிறது. 30 வருட அவலங்களுக்குப்பின் ஓரளவு அமைதியுடன் கிறிஸ்து பிறப்பை எதிர்கொள்கின்றோம். மனிதனை பாவம் அகந்தை சுயநலம், அநீதி, அடிமை, அடக்குமுறைகள் அனைத்திலும் இருந்து மீட்க இறைமகன் இயேசு அவதரித்தார்.

இந்த கிறிஸ்மஸ் விடியல் நமது சிதைந்துபோன இழந்த வாழ்வை மீண்டும் கட்டி எழுப்ப நமக்குள் இருக்கும் தெய்வத்தை உள்ளுணர்வுடன் உணர்ந்து அகதிகளாக இழப்பின் சுமைகளுடன் நிச்சயம் அற்ற எதிர்காலத்தை காத்திருக்கும் மக்களில் ஆண்டவனைக் கண்டு அவர்களுக்கு நம்மால் ஆனவற்றைச் செய்து எமக்காக அவதரித்த இயேசு பாலனின் உருவை நமது உடன் பிறப்புகளைக் கண்டு கொண்டாடுவோம்.

வாசகர்கள் அனைவருக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்து நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

ஆசிரியர்

அருட்தந்தை S.டேமியன்

# இருளகற்றும் ஒளிகளா நீங்கள்?

மனித வாழ்வின் மகிழ்சிக்காக எத்தனை முயற்சிகள்? எத்தனை எதிர்பார்புகள்? எல்லாவசதிகளும் நிறைவாய் இருக்கும் இல்லங்களில் மகிழ்ச்சி நிறைவாய் இருக்கும் என்று எண்ணினால் அதுவும் ஏமாற்றமே என்பதனை நாம் தரிசிக்கும் பல இல்லங்களில் காணமுடியும்.

உறவுள்ள அநாதைகளாக, பணமிருந்தும் நிம்மதியில்லாத பல உள்ளங்களின் ஏக்கங்கள் அப்புறச் சூழலையும் இருளாக்கி விடுகிறது. சிலர்வாழும் சூழல் மிகச் செழுமையாக, கலகலப்பாக, சிரிப்பொலிகள் தவளும் அழகியல் பூங்காவாக பரிணமிக்கும் இவற்றுக்கு எல்லாம் என்ன காரணம்? வசதிகளோ, வாய்புக்களோ பணங்களோ, பதவிகளோ உதவிகளோ அல்ல எந்த சூழலையும் ஏற்றுவாழும் நல்ல உள்ளங்களின் நட்புக்களோடும் பெரிய விருந்துகளில் கிடைக்காத மகிழ்ச்சி ஓலைக்குடிலுக்குள் பகிர்ந்து பருகும் தேனீர் பரிமாற்றத்தில் கூட மகிழ்வின் சுவையை தரிசிக்கமுடியும்.

ஏன் இவ்விடயத்தை பகிர முனைகிறேன் என்றால் இன்றய காலம் இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சைபோல உலக மயமாக்கலுக்குள்ளும் இறக்குமதியிலும் மயங்கி தவிக்கும் சூழலில் தமது அடையாள நல்லுறவாடலை தொலைத்து அந்தரிப்போர் அதிகமாகி ஒப்பீட்டு வாழ்வு வாழமுற்பட்டு தம் இருப்பை தெரியவைத்தது விடாத மனித உறவுகள் உணர்வுகள் சிதைவடைவதை காணும்போது போலிகளே சிலரது கேலிகளாகிவிட்டன. துன்பத்தைக் கண்டு துவளமுடியாமலும், இன்பத்தை கண்டு இயற்கை மறந்தவர்களாகவும் மாறும் மாயைக்குள் சிக்காது வாழ்வை வைத்து பிறர் வாழ்வின் உணர்வுக்கும் உறவுக்கும் உறவாடலால் நல்ல சூழலை உருவாக்க வேண்டிய காலமிது என்பதினை உங்கள் சந்திப்புகளில் சிந்திக்க தூண்டுவதேயாகும்.

துன்பங்கள் சிலரைப் பண்படுத்துகின்றன, சிலரை சுட்டெரிக்கின்றன? என்பார் ஜான்ரே என்ற அறிஞர் இவை பலரது வாழ்விலும் எதிர்கொண்டவைதானே என ஏற்றுக்கொண்டாலும்

அதில் கற்றுக் கொண்ட பாடங்கள் மனிதர்சிலரை புனிதராக மாற்றி உள்ளது.

வாழ்வில் துன்பத்தை எதிர்கொண்டு மீண்டவரிடம் உள்ள அனுபவங்கள் அவர்களின் வாழ்வையே மாற்றி உள்ளது. மரணப்பிடியில் சிக்கி மீண்டவரின் வாழ்வில் கிடைக்கின்ற ஒவ்வொரு நாட்களும் மனித வாழ்வின் சுவையை இரட்டிப்பாக்கும். இதில் துணைநின்று உதவும் உள்ளங்களின் செயல்களில் கூட மகிழ்ச்சியை அனுபவிப்போர் பாக்கியசாலிகளே.

உங்கள் சூழலில் பல சுமைகளோடு துன்பத்தின் வடுக்களை சுமந்து வாழ்வோரை மகிழ்விப்பதில் துணைநிற்கும் உள்ளங்களில் நீங்களும் ஒருவராக இணைந்து மகிழ்வான சூழலை உருவாக்கும் ஒவ்வொருகணமும் புதிதாய் மனிதநேயம் கொண்ட மனிதன் ஒருவன் உருவாவான். அதன் வெளிப்பாடுகள் எச்சூழலிலும் இருளகற்றும் ஒளி ஒன்று ஏற்றப்படுவதைக் காணமுடியும். அந்த ஒளி ஏற்றும் கரம் உமது கரமாக உமது சூழலில் பலரை ஒன்றிணைப்பதே இலட்சியமாகட்டும்.

எந்தப்பணியிலும் தூரநோக்கான மனிதநேயம் மலர உழைப்போரே இன்றைய தேவையாகின்றனர் அந்த நல்லுள்ளம் கொண்டோர் இருவர் நால்வராக, நால்வர் எண்மராக நல்ல சூழலை விஸ்தரிப்பதால் எமது தேசத்தில் நுழையமுற்படும் சமூக சீர்கேட்டு சுரண்டல்களுக்கு தடைவேலியாக மனித மனங்கள் ஒன்றிணைத்தலில் சிறுவர், முதியோர், மகிழ்வூட்டலும், குடும்பதலைவர்களை இழந்தோர் தம் பொறுப்புணர்ந்து செயல்படும் முன்மாதிரிகள் சமூக வழிகாட்டிகளாகவும் தலைமை ஏற்று புதிய வரலாற்றை படைப்போராவதை உருவாக்கி, உருவாகும் நல்லசமூகம் எதிர்கால சந்ததிகளாவர். இருளைப்பழிப்பதை விட ஒளியேற்றும் கருவிகளாவோம். வாழ்த்துக்கள்.

அன்புடன் ஜோசப் பாலா

# ஒளியாக நீ வேண்டும்

இருண்ட எம் வாழ்வில்
விடியலை தேடி அலைகின்றோம்
இருள் சூழ்ந்த எம் மனதில்
ஒளிதர நீ வேண்டும்
புவிமீது நான் வாழ
புதுவாழ்வு எமக்கு வேண்டும்
மனிதமனங்கள் மாறவேண்டும்
மானிட இதயங்கள் மலரவேண்டும்
சிறைக்குள் வாழும் கைதிபோல்
சிற்றறைகளுக்கள் சிறைப்பட்டு வாழ்கின்றோம்.
ஏங்கித்தவிக்கும் எம் வாழ்வில்
ஏக்கம் தீர்க்க - நீ வேண்டும்
எம்மிடம் மலர்க மார்கழி குளிரினிலே
மரியன்னை மடியினிலே
மழலையாய் உதித்த மாபரனே
மானிட மனங்கள் மாறிட
மீண்டும் எம்மிடையே வாறாயோ!

நி. விஜித்தா
அச்சுவேலி.

# Jesus whispers

Be my friend
Be my friend forever,
We have to walk a long distance,
There you meet joys and successes,
But also you humans,
Meet pains and fears.
Don't be afraid,
Because I am near,
Keep trusting in me,
I guide you my dear.
I light your way,
Like a candle,
I feed you my sheep
I am your shepherd
My father is waiting,
For you in heaven,
You will be blessed,
If you are together.
Be my friend be my friend forever.......
I am your loving sacred friend Jesus.........

*Miss.A.Mary Jebojini*
*Chempianpattu*

## பாடசாலையின் ஆலோசனை வழிகாட்டல் திட்டத்தின் வெற்றியில் ஆசிரியரின் பங்கு

சமுதாயத்திலே சிறந்த பிரஜையாக வாழ உதவுதலும் சமூகத்தில் மற்றையோருடன் இணைந்து செயற்படும்போது ஏற்படும் பிரச்சனைகளை வெற்றிகரமாகத் தீப்பதற்கு உதவுதலும், மாணவர்கள் சிறப்பாக வளர்ந்து கொண்டு சமூகத்திற்கு தம்மாலான பங்களிப்பை வழங்க உதவுதலும், பாடசாலையின் கடமைகளாகும். இதற்கு பாடசாலைகள் சகல மாணவர்களுக்கும் ஒவ்வொரு மட்டத்திலும் வழிகாட்டல் அவசியமாகும். இதன் காரணமாக பாடசாலையில் ஆற்றுப்படுத்தல் சேவை மிக அவசியமானதாகக் கருதப்படுகின்றது. கல்வியும் வழிகாட்டலும் ஒன்றையொன்று பிரிக்கமுடியாததன் காரணமாக இவை ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் என குறிப்பிடப்படுகின்றது. குழந்தையினுடைய விருத்திக்கு இவையிரண்டும் அவசியமானவை. தன்னுடைய தனித்துவத்தை அக்குழந்தை தான் வாழும் சூழல் பின்னணியில் அறிந்துகொள்ளும் இயல்பு பொதுவாகக் காணப்படமாட்டாது. எனவே இவற்றை இணைக்கும் வகையில் வழிகாட்டல் சேவை மிக இன்றியமையாததாகின்றது. அதாவது தனியாள் தன்மை உணர்ந்து கொள்ளவும், தன்னை வழிப்படுததவும், தன்னைத்தானே ஏற்றுக்கொள்ளவும், தன்னைத்திசைப்படுத்தவும் உதவியளிக்கும் செயற்பாடே வழிகாட்டல் எனப்படும். அதாவது வாழ்வின் சகலசந்தர்ப்பங்களிலும் எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும், சுயதிறன்களை விருத்திசெய்யும் பொருத்தமான தெரிவுகளை செய்யவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும், உளவியல் அணுகுமுறை அடிப்படையிலே பயிற்சி பெற்றவர்களாலே வழங்கப்படுகின்ற உதவி ஆற்றுப்படுத்தல் வழிகாட்டல் ஆகும்.

சீர்மியம் என்பது ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அம்சமாகும் முன்னைய காலத்தில் வழிகாட்டல்தான் கல்வி கல்விதான் வழிகாட்டல் என Termankelle" என்பவர் குறிப்பிடுகின்றார். ஆனால் இன்றைய உலகில் பல்வேறு பிரச்சனைகளுக்கும், சிக்கல்களுக்கும், மாணவர்கள் முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதனால்

பல தீர்மானங்களை எடுக்கவேண்டியவராகவும் சிலவேளைகளில் பிறர் உதவியின்றி சுயாதீனமாகவும், விவேகமாகவும் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

பண்டைய சமூகத்தில் குருமார், ஆசிரியர் போன்றோர் இத்தேவையை நிறைவேற்றி வந்தார்கள். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள குறிப்பான சூழ்நிலை காரணமாக இவ்வழிகாட்டல் சேவையின் தேவை அதிகரித்து வந்துள்ளது. பின்வரும் சில காரணிகள் வழிகாட்டல் சேவையின் தேவையை அதிகரித்துள்ளன.

1. பாடசாலை மாணவர்களிடையே பெருமளவில் காணப்படும் தனியாள் வேறுபாடுகள்.
2. கல்வி இலக்குகளில் ஏற்பட்டுள்ள மாற்றம்.
3. பாடசாலை வழங்கும் சேவை அதிகரித்தமை.
4. தொழிலுலகின் சிக்கல்தன்மை அதிகரித்தமை.
5. தனிமனித வாழ்வில் கைத்தொழில் மயமாக்கல் ஏற்படுத்தியுள்ள தாக்கம்.
6. மனிதவலுவிருத்தியும் பயன்பாடும்.
7. தேசிய வளத்தை உயர்த்துதல்.
8. மாணவருடைய குடிப்பெருக்கம்.
9. தொழிற்பாடுகளின் சிறப்புத்தன்மை.
10. தொழில் மாற்றங்கள்.
11. பாடசாலை இணைக்கருமங்களின் பெருக்கம்.
12. நிறுவனக் கல்வியை முடித்தபின்பு ஒருவரைச் சரியான இடத்தில் அமர்த்துதல்.
13. குடும்ப அமைப்பு பலவீனமடைந்து வருதல்.
14. சமூக, கலாச்சார, மாற்றங்கள்.
15. உள்நாட்டுயுத்தம், இயற்கை அனர்த்தம், பெருகுதல்
16. அறநெறி, மனிதவிழுமியங்கள் என்பவற்றுடன் செல்வாக்கு அருகிவருதல்.

பொதுவான அமைப்புக் கொண்ட பாடசாலைக்கலைத் திட்டத்தின் மூலம் தனியாள் வேறுபாடுகள் நிராகரிக்கப்படுகின்றன. இதனால் உள்முரண்பாடுகள் நெருக்கீடுகள் சீராக்கப் பிரச்சினைகள், நெறிபிறழ்வுகள் ஏற்படத் தொடங்குகின்றன.

இந்நிலையில் அவர்களை கண்டித்து தண்டனைகள் வழங்கும்போது மேலும் சிக்கல்நிலை உருவாகலாம். பாடநெறித்தெரிவுகள், பாடத்தெரிவுகள் போன்றவற்றை மாணவர்கள் தெரிவு செய்யும்போது பெற்றோர்களுடைய திணிப்பு நடவடிக்கைகள். மேலும் நிலமையைச் சிக்கலடையச் செய்யலாம். எனவேதான் தனியாள் வேறுபாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வழிகாட்டல் தேவை அவசியமாகிறது இத்தகைய தனியாள் வேறுபாடுகளை பிறப்புரீதியான மரபணுக்கள். சூழல் வளர்ப்புமுறை, மனிதனின் உள்ளார்ந்த தேவைகளின் உந்தல்கள், உடல்சார் தொழிற்பாடுகள் புலக்காட்சி பெறும் முறைமை, உளஅமைப்பும், அறிகை அமைப்பும், அறிவைத் திரட்டிக்கொள்ளும் முறை மனவெழுச்சி விருத்தி, சூழலின் கவிநிலை, சூழலில் நிலவும் தொடர்பாடல் முறைமை, மொழியாற்றல், பிரச்சனைகளும் சவால்களும், குடும்பம், சமூகம், கல்விநிலையங்களில் பிள்ளைகளின் நடிபங்கு, போன்ற காரணிகள் தீர்மானிக்கின்றன.

ஒரு பரந்த வழிகாட்டல் சேவைத்திட்டம் பல்வேறு பிரிவுகளாக வகுப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் தனித்துவமான சேவைகளாகக் கருதப்படுகின்றது. அதாவது தனியாள் பட்டியல்சேவை (Personal data Service), தகவல் சேவை (Information Service), ஆலோசனை வழங்கல்சேவை (Counselling), அமர்த்தும் ஏற்பாடு செய்யும் சேவை (Placement Service), பின்மொடர் சேவையும் மதிப்பீட்டு சேவையும் குழுவழிகாட்டல் சேவை (Group Guidance Service), கல்வி தொழில் தொடர்பான திட்டமிடல் சேவை (Educational Occupational Planning Service), விசேட வழிகாட்டல் சேவை (Referral Service), ஆய்வுச் சேவை (Research Service), பதிவுச்சேவை, என்னும் பிரிவுகளாக வழிகாட்டல் சேவை பிரிக்கப்பட்டுள்ளது. இப்பரிவுகளுள் ஆலோசனை வழங்கல் சேவையும் (Counselling Service), கல்வி தொழில் தொடர்பான திட்டமிடல் சேவையும் (Education Occupational Planning Service), ஆகிய பிரிவுகள் பாடசாலைக் கலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் குழுவழிகாட்டல்

சேவையும் (Group Guidance Service) சில பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது,

கல்வித்தேவையைப் பூர்த்தி செய்வதிலும் உயர்தர, 3ம் நிலைக்கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதிலும் தோல்வியைகண்டுள்ளது. ஏனெனில் ஏற்கனவே இருந்த முறைசார்கல்வியானது வழிகாட்டல் என்ற அம்சத்தை முதன்மைக் கருவாகக் கொண்டிருக்கவில்லை. எனவே இன்றைய மாணவர்கள் தமது பலம், பலவீனம், என்பவற்றைத் தாமே மதிப்பிடவும், எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவும், தீர்வுக்குரிய வளங்களைப் பெற்றுக்கொள்ளவும், தீர்வுமுறைகளைத் தேர்வுசெய்யவும் வழிகாட்டல் சேவையானது அவசியமாகின்றது. இந்நிலையில் கல்வியும், வழிகாட்டலும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாத ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போலிருப்பதை தெளிவாக அறியமுடிகின்றது. எனவேதான் முன்பிருந்த கல்வி ஏற்பாடுகளில் காணப்பட்ட பல பலவீனங்களைக் கொண்டிருப்பதால் தொழில் வழிகாட்டலும் சீரமியமும் பற்றிய புதிய அம்சங்கள் 1997ம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தில் சேர்க்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது

பாடசாலையிலே வழிகாட்டல் பிரிவை அமைக்கும் போது தனிநபர் கௌரவம், தகுதி, பெறுமானம் என்பவற்றை மதித்து அவற்றின்மீது ஜனநாயக சமூகத்திற்குரிய அக்கறையை பேணக்கூடிய முறையில் வழிகாட்டல் நடத்தப்படவேண்டும். வழிகாட்டல் என்பது வாழ்நாள் முழுவதற்குமான செயன்முறைகளை உள்ளடக்கி இருப்பதுடன் ஒருவன் தன்னைத்தானே நெறிப்படுத்தும் ஆற்றலை ஒருவரிடத்தே விருத்தி செய்வதற்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட சிலருக்கின்றி எல்லோருக்குமே அவசியமான தொன்றாக கருதப்படுவதுடன் வழிகாட்டல் என்பது ஒரு குறித்த விடயம் சார்ந்ததன்று முழுமையானது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் மேலும் நல்லுறவை வளர்ப்பதை இலக்காகக் கொண்டிருப்பதுடன் தரவுகளின் அடிப்படையிலேயே வழிகாட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் வழிகாட்டுனர், சீர்மியர் என்போர் சிறந்த அறநெறிப்பண்பு உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

பாடசாலை வழிகாட்டல் திட்டமானது பாடசாலைக் கல்வியினுடைய அத்தியாவசிய தொழிற்பாடக பாடசாலைக்கல்வி நிர்வாகிகளால் எற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
பாடசாலையின் குறிக்கோள்கள், செயற்பாடுகள் என்பற்றிற்குப் பொருத்தமாக அமையவேண்டும் அத்துடன் பாடசாலையின் சமூகச் சூழலும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். ஏனெனில் வழிகாட்டல் திட்டமானது மாணவர்களுடைய ஆளுமைவளர்ச்சிக்குரியது, என்ற நம்பிக்கையை ஊட்டவேண்டும். ஆசிரியர்களிடயே இத்திட்டத்திற்குச் சார்பாக மனப்பாங்கை வளர்க்கக்கூடியதாகவுள்ளது. அத்தோடு ஒவ்வொரு பாடசாலைகளிலும் குறிப்பிட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவரால் இத்திட்டம் தலைமை தாங்கி நடத்தப்படுதல் வேண்டும். மேலும் இத்திட்டத்தின் வெற்றிக்கு சிறப்புப்பயிற்சி பெற்ற நிபணர்களும் பணியாற்றவேண்டும். இந்த தலைமைதாங்குபவர் பல ஆசிரியர்களின் முயற்சிகளை ஒருங்கிணைப்பவராக இருத்தல் வேண்டும். குழுவழிகாட்டலுக்கு (Group Guidance) சகல ஆசிரியர்களினதும் பங்களிப்பும் அவசியமாகும். அத்துடன் ஆசிரியர்களால் பயிற்சி பெற்ற எழுதுவினைஞர்களால் முழுமையான திரள் பதிவேடுகள் பூரணப்படுத்தப்படவேண்டும். வழிகாட்டல் திட்டத்தில் நாட்டமுள்ள ஆசிரியர் குழாமில் ஒத்துழைப்பை வரவேற்பதாக இருத்தல் வேண்டும்.

பாடசாலைகளில் பாடசாலை வழிகாட்டல் திட்டப்பிரிவை ஆரம்பித்து அதிபர், வழிகாட்டல் ஆசிரியர், தொழில் வழிகாட்டல் ஆலோசகர், ஆசிரியர் பிரதிநிதி, பெற்றோர் பிரதிநிதி, ஆகியோரை நியமித்து வழிகாட்டலில் பங்குபெறும் சீரமியர் அதிபர் ஆசிரியர், பிரதிநிதி, வகுப்பாசிரியர், உடற்கல்வி, அழகியற் கல்வி ஆசிரியர்கள் ஏனைய குறிப்பிட்ட கல்விசாரா ஆளணியினர் உரிய வழிகாட்டல், நிலையத்தில் செயற்படவேண்டும். ஏனெனில் பாடசாலை வழிகாட்டல் திட்டம் வெற்றி பெறுவதற்கு சிறந்த அதிபரும் சிறந்த ஆசிரியர் குழாமும் அவசியம் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மாணவர்களைப் பற்றிய தகவல்களை அளிப்பதில் இவர்களின் பங்கு முக்கியமாகும் ஏனெனில் மாணவர்களுடைய உடல்நலம், புலனுணர்ச்சி சார்ந்த

தகவல்களை அளிக்கக்கூடியவர்கள் ஆசிரியர்களேயாவார்.

மேற்கூறிய விடயங்களைத் தொகுத்து நோக்கும்போது தற்போதைய சிக்கல் நிறைந்த வாழ்க்கைச் சூழலில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் சவால்களையும் சமாளித்து வாழ்வதற்கும், தமது கல்வியறிவு மட்டத்தை மேலும் உயர்த்திக் கொள்வதற்கும், வழிகாட்டல்சேவை பாடசாலைகளில் இன்றியமையாததாக உள்ளது. ஏனெனில் புதிய பாடங்கள், கற்கைநெறிகள், அவற்றைப் பின்பற்றித் தேவையான தகுதிகள் என்பவற்றை முன்கூட்டியே அறிந்துகொள்ளச்செய்து மாணவர்களை அதற்குத்தகுந்தவாறு திட்டமிடச் செய்யவேண்டியுள்ளது. இவ்வழிகாட்டல் சேவையானது பாடசாலைகளில் வெற்றிபெற வேண்டுமாயின் சிறந்த அதிபரும், சிறந்த ஆசிரியர்குழாமும் இருத்தல் வேண்டும். இங்கு சிறந்த ஆசிரியர்குழாம் குறித்த திட்டம் தொடர்பான அறிவு, ஆற்றல், நாட்டல், அர்ப்பணிப்பு, அனுபவம் உடையனவாக இருத்தல் வேண்டும். ஏனெனில் ஏனையோரைவிட குறித்த மாணவர்களின் வகுப்பாசிரியர்களுடன் மாணவர்நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதால் மாணவர்களின் கஷ்டங்கள் குடும்பச்சூழல், பணப்பிரச்சனை பிற நெருக்குவாரங்கள், தனியாள் வேறுபாடுகள் என்பவற்றை நன்கு அறிந்து மாணவர்களுடன் பரிவுடன் நடந்துகொள்வதன் மூலமும் அவர்களிடம் அக்கறையை வெளிப்படுத்துவதன் மூலமும் மாணவர்களுக்கு ஆசிரியர் நல்வழிகாட்ட முடியும். இவ்வாறு வழிகாட்டும் திட்டத்தில் ஆசிரியரின் பங்கு (Role of teacher in Guidance Programmes) இன்று மிக முக்கியமாக நோக்கப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

1) பேராசிரயர்கள் சபா. ஜேயராசா - கல்விச்சீர்மியம் (2002) பொஸ்கோ பதிப்பகம், நல்லூர்

2) பேராசரியர் சபா ஜெயராசா - ஆற்றுப்படுத்தலும சீர்மியமும் (1997) யாழ் பட்டதாரி ஆசிரியவாண்மை விருத்தி அமைப்பு

3) கிருஷ்ணபிள்ளை -வி - வழிகாட்டலும் ஆலோசனையும் (2001) கொழும்பு

4) கமலநாதன் தி. - அகவிழி - செப்ரெம்பர் 2005 தனபாலன் - பா. (பக் 19 - 20)



ச.சுவேந்திரன் (B.A.Dip.in Edu. Trd Com.)

# சிறுகதை

மாலை முழுவதும் அப்பாவிற்கு கடல் தொழிலிற்குச் செல்வதற்கு உதவி செய்து கொடுத்தது.... இரவு விளக்கிற்கு எண்ணெயில்லை.... காலை கடற்கரைக்குச் சென்று மீன் வள்ளத்தால் இறக்கியது..... இன்று கணித சேர் கைமுறியத்தரப்போகிறார். மார்கழி மாதத்தில் பரீட்சை எடுத்து என்னன்டுதான் பாஸ்பண்ணப்போகிறேனோ தெரியவில்லை. இவ்வாறு சிந்தனை வயப்படட்வனாய் பாலா வீதியில் ஏறினான்

வீதியில் ஏறும்போது மோட்டார் சயிக்கிலும், துவிச்சக்கர வண்டியும் மோதும் சத்தம் கேட்டு தொடர்ந்து "ஐயோ அம்மா" என அலறும் ஓசையும் கேட்டது.

அவன் அவ்விடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கே அவனது பள்ளியில் தரம் 5 இல் கல்வி கற்கும் சிறுமி விழுந்துகிடந்தாள். சிலர் அவளைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு சென்றார்கள். இவன் அவளது சைக்கிள் சிதறிய பாடப்புத்தகங்கள் என்பவற்றை அவளது வீட்டில் கொண்டு சென்று கொடுத்து விட்டு நடந்தவற்றைக் கூறி விட்டுப் பாடசாலை திரும்பினான்.

பாலா தூரத்தில் வரும்போது கணிதசேர் வகுப்பில் நிற்பது தெரிந்தும் நடுங்கியவாறே வகுப்பிற்குச் சென்றான் "சேர் எக்ஸ்கியூஸ் மீ" என்றான். "என்னடா வீட்டு வேலை செய்தியா கொண்டு வா கணிதக் கொப்பியை" என்றார் பாலா தனது புத்தக்ங்களைப் பார்த்தான் கணிதக் கொப்பியை காணவில்லை. பாலாவின் உடல் நடுங்கியவாறே "கொப்பியை காணவில்லை சேர் என்றான்"

அப்போது அதிபரும் சிறுமியின் தந்தையும் இவனது வகுப்பிற்கு வந்து சிறுமியின் கொப்பியுடன் இவனது கொப்பியும் வந்துவிட்டதாக நடந்தவற்றை கூறி அவனையும் பாராட்டிவிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் "பாலா உள்ளே வா" என கணித ஆசிரியர் கூப்பிட்டு அவனை முதுகிலே தட்டிக் "கவனமாகப் படிக்க வேண்டும்" அவரது குரலிலே கனிவு இருந்தது.

தான் சிறுமியின் கொப்பிகளை கொடுக்கும் போது தனது கொப்பியையும் கொடுத்தகைத் நினைத்தான். அப்போது அவனது கொப்பிமாறி இருக்கும்.

ஆசிரியர் புன்முறுவலுடன் "விளங்காததைக் கேட்டுக் கவனமாய் படிக்க வேண்டும்" எனக் கூறினார். சிடுசிடுக்கும் கணித ஆசிரியரா இப்படி! நான் கட்டாயம் சோதினை பாஸ் பண்ணுவேன். பாலாவின் மனதில் நம்பிக்கையும் உறுதியும் அது கண்களில் மிளிர மிக விருப்புடன் கரும்பலகையைப் பார்த்தான்

ஜே. ஜெயரூபி
உளசமூகப் பணியாளர்
அஞ்சலியகம்,

# பிரியமானவளே

பள்ளிப் பருவமதில்

நண்பியாக நீவந்தாய்

விழி திறக்க முடியவில்லை

வழி கூட தெரியவில்லை

நினைவினில் நீயிருக்க -உன்

அன்பினிலே நான் நனைந்தேன்

விடி காலை மலர்ந்த போது

கனவிலும் நான் நனைந்தேன்

நியாயமான உன் அன்புக்காக

தவம் கூட நான் இருப்பேன்

நண்பியே உனக்காக என்று சொன்னால்

உயிர் கூட நான் தருவேன் நண்பியே.

விழிப்பதற்கே உறக்கம்

வெல்வதற்கே தோல்வி

எழுவதற்கே வீழ்ச்சி

எங்கு நூலகம் திறக்கப்படுகிறதோ

அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

தேவராசா சர்மிளா
தரம் 13 .2009 A/L
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

# அவலங்கள் மத்தியில் அன்னையர்களினால் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கைள்

01. எனது துன்பம் சொல்லமுடியாது. ஆனாலும் துன்பத்திலும் பல அனுபவங்களைக் கண்டு வந்துள்ளேன் இனியும் நாம் வாழுவோம்.

*இ.வசந்தி, வெளிச்சவீட்டு ஒழுங்கை, பருத்தித்துறை.*

02. எப்போதும் நல்லதையே நினை.

சு.நிர்மலாதேவி, கி.உதயபாசம், பருத்தித்துறை.

03. நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் வாழுவோம்.

ச.ஜெனிதா கற்கோவளம்

04. எனது வாழ்க்கையில் தோல்விதான் முதல் பரிசு.

பு.ஆனந்தி

05. எந்தத் தீமைக்குள்ளும் சிறு நன்மையுண்டு துன்பத்தைக் கண்டு துவண்டு விடாதே. .அலன்ரீனா.

06. நம்பிக்கையே வாழ்க்கை வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவோம்

மு.லதா

07. எங்கள் சமுதாயத்தில் வாழும் மாணவ மாணவிகள் படிப்பிற்கு ஊக்குவிப்பதற்கு உதவி செய்வேன்.

அ.ஜாக்குலின், மணல் ஒழுங்கை, பருத்தித்துறை.

08. எனது பிள்ளையின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும். நான் எனது பிள்ளையின் எதிர்காலத்திற்காக வாழ்கின்றேன்.

பு.தமிழ்ச்செல்வி, இ.சசிகலா, கு.சசிகலாஈ ரா.மேரிஜான்சி

09 நடப்பது நடந்து முடியட்டும் என் உயிர் உள்ளவரை என் பிள்ளைகளை உறுதுணையால் வளர்ப்பேன்.

அலிஸ்ரன் வினோதினி, இ.பார்மலாதேவி, பா.சசிதா

10. எனது பிள்ளைகளை கல்வி விளையாட்டுத்துறைகளில் முன்னேற்றுவதுதான் எனது நம்பிக்கை.

நா. ஜெகதீஸ்வரி, அ.இராஜேஸ்வரி

11. கலங்காதீர் யேசு கைவிடார். நான் வாழ்வது எனது பிள்ளைகளுக்காக.

யு. ஜெயராணி, யோ.மரியகொன்சலா நந்தினி

12. நான் என் குடும்பத்தை நல்ல முறையில் வளர்த்தெடுப்பேன்.

ஜே.மேரிஆன்ஜான்கினி, வி.சித்திராலயா, கொ.றெகோக்கா அ.மோடொனாறதி

13. நான் எனது பிள்ளைகளை படிப்பித்து நல்ல பலன் அடையவேணும் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

அற்புதநேசன் ஈஸ்வரி, கற்கோவளம்.



# நேர்காணல்

தாரகா விதைவைகளுக்கான தலைவர் திருமதி இதயராஜ் சஜிந்தா அவர்களுடன் ஓர் நேர்காணல்:

மேற்கூறப்பட்ட நபர் கணவனை இழந்த பெண்களும் சமூகத்தில் மற்றவர்களால் மதிக்கத்தக்கவராக வரமுடியும் என்பதை ஒரே வாழ்க்கை முறையில் வாழ்ந்து காட்டிய, காட்டிகொண்டிருக்கின்ற ஒரு உயர்ந்த பெண். எமது சமுதாயத்தில் பெண்களானவர்கள் பேதைகள் என்றும், அதிலும் கணவனை இழந்தவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள் என்றும், அடங்கி ஒடுங்கி வாழவேண்டும் என்றும், நல்ல காரியங்களை இவர்கள் கனவில்த்தான் காணமுடியம் என்றும் இப்படிப்பட்டவர்கள் இனிமேல் முன்னுக்கு வர முடியாது. என்று நினைப்பவர்கள் மத்தியில் இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து உயர்வு பெற்று நாடளாவிய ரீதியில் நோபல்பரிசு பெறுவதற்கான சிபாரிசு பெற்றவர்தான் இந்த சஜிந்தா இவரிடம் இருந்து சில வினாக்கள்

1)உங்களது பெயர் என்ன?

எனது பெயர் திருமதி இதயராஜ் சஜிந்தா எனது ஊர் சுதுமலை தெற்கு, சாவற்காடு

2)உங்களது குடும்பத்தைப் பற்றிக் கூறமுடியுமா?

எனது தந்தை 1988 இல் இறந்துவிட்டார் எனது கணவன் திருமணம் முடித்து ஒரு வருடத்தாலே என்னை ஒரு பெண் குழந்தையுடன் விட்டுவிட்டு 1996 இல் இறந்துவிட்டார். தற்போது எனது மகள் தரம் 10 இல் உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கின்றார்.

3)நீங்கள் உங்களால் உருவாக்கப்பட்ட மையம் பற்றி குறிப்பிடமுடியுமா?

ஆரம்பத்தில் கூட்டங்களில் இணைந்து கொள்வதில்லை பின்னர் உளவளத் துணையாளர்களின் தூண்டுதல்

காரணமாகத்தான் மெல்ல மெல்ல கூட்டங்களில் பங்குபற்றி அவர்களின் ஆற்றுப்படுத்தலால் சமூகத்தில் விதவைகள் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி முன்னேற வேண்டும். என்பதற்காக இந்த தாரகா விதவைகளுக்கான மலர்வு மையத்தை உருவாக்கினோம். இன்று எங்கள் மையம் ஏனைய விதவைகளுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்துவருகின்றது. இந்த மையத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டதன் பயனாக கிடைத்த விலைமதிக்கமுடியாத பரிசுதான் எனக்கு 2005 ஆண்டு கிடைத்த நோபல் பரிசு சிபார்சு.

4)ந ீங்கள் இவ்வாறு முன்னேறுவதற்கு முயற்சி செய்யும் போது முகம் கொடுத்த தடைகள் ஏதாவது கூறமுடியுமா?

நான் இந்த நிலைக்கு வருவதற்கு முன்னர் பல தடைகளை தாண்டி உள்ளேன். ஆரம்பத்தில் நான் எங்கள் சங்க விடயரீதியாக ஏனைய நிறுவனங்களை சந்திக்கச் சென்ற போது சமூகத்தில் உள்ளவர்கள் கணவனும் இல்லாமல் திரிகிறாள் என்றார்கள். நான் மோட்டார் வண்டியில் செல்வதைக் கூட எதிர்த்தார்கள். அப்போது எங்கள் சங்கத்திற்கு அங்கத்தவர்களை இணைக்க முற்பட்ட போது அவர்கள் இதை ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் அவர்களுடன் ஒவ்வொருநாளும் கதைத்துக் கதைத்ததுத்தான் இன்று இந்த உயர்வை நானும் எனது சங்கமும் அடைந்து உள்ளோம். எமக்குத் தடைபோட்ட சமூகம் இன்று எம்மைப் பாராட்டுகின்றது.

எனவே எமக்கு ஏற்பட்ட தடைகள் ஒவ்வொன்றும் எங்களது வளர்ச்சிக்கு உரிய படிக்கற்களாகவே கொள்கின்றோம்.

5)ச மூகத்தில் கணவனை இழந்தவர்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி உங்களால் கூறமுடிமா?

முதலில் கையாழ்பவரும் துணைநாடியும் நல்நம்பிக்கை

ஏற்படக்கூடிய நல் உறவை ஏற்படுத்த வேண்டும்.

பின்னர் அவர்களது பிரச்சினைகளை உடனிருந்து கதைத்தல் வேண்டும். இவ்வாறு கதைப்பதன் ஊடாக பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரமுடியும்.

அவர்கள் தங்களது பிரச்சினையிலிருந்து விடுபடச்செய்வதற்குரிய தொடர்பு ஊடகமாக நாங்கள் இருத்தல் வேண்டும். இவ்வாறு செயற்படுவதன் ஊடாக அவர்களை இயல்பு நிலைக்கு கொண்டுவர முடியும்.

ஒதுங்கி ஒதுங்கி இருப்பவர்களை வெளி உலகிற்குச் சென்று சாதாரணமாக அவர்களோடு கதைப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறான முறைகளில் இவர்களை அழைத்துச் செல்வதன் ஊடாக இவர்களை வாழ்க்கையில் வெற்றி பெறச் செய்யலாம்.

6)இ ப்படிப்பட்டவர்கள் சமூகத்தில் எவ்வாறான பிரச்சனைகளை எதிர் கொள்கிறார்கள் என்பது பற்றி கூறமுடியுமா?

அவர்களது ஆண்களிடம் உதவி கேட்கமுடியாத நிலை காணப்படுகின்றது. அவ்வாறு மீறி உதவி கேட்டால் சமூகம் கதை கட்டிவிடும்.

இப்படிப்பட்ட பெண்கள் தனியாகத்திரிந்து தங்களது வேலைகளைச் செய்யமுடியாது உள்ளது.

இவர்கள் நல்ல காரியங்களை முன்னின்று செய்ய முடியாது உள்ளது.

7)இ வர்கள் சமூகத்திலும் வாழ்வாதாரத்திலும் முன்னேற எவ்வாறு செயற்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்.

சமூகத்தினரால் கூறப்படுகின்ற தடை வார்த்தைகளைப் பொருட்படுத்தாது சரியான முறையில் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் சமூகத்திலும் வாழ்வாதாரத்திலும் வாழ முடியும்.

நன்றி

நேர்காணல்

கைகிரி (F.Sc)

(உளவளத்துணையாளர்)

# அறம்

1. அறத்தின் வழி நில்! அஞ்சவேண்டாம்! உன் இட்சியமெல்லாம் உன் தேசத்தை, உன் கடவுளை, உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும் அங்ஙனமாயின் நீ வீழ்ந்து விட்டாலும் பாக்கியம் பெற்றுத் தியாகியாகவே வீழ்வாய்.

   - ஷேக்ஸ்பியர் -

2. அறத்தின் இலட்சணம் அறியாதவரே, அறம் செய்தோம், கூலி எங்கே? என்று இரைந்து கொண்டிருப்பர்.

   - மேட்டர்லிங்க் -

3. அதர்மம் அணியும் ஆடை ஐஸ்வரியம், தர்மம் தரிப்பது தரித்திரம்.

   - தியோக்னீஸ் -

4. மனத்தைத்தவிர குறையுள்ளது இயற்கையில் வேறு கிடையாது. அன்பில்லாதவரே அங்கவீனர் அறமே அழகு அழகான மறம் முலாம் பூசிய சூனியப் பேழையாகும்.

   - ஷேக்ஸ்பியர் -

5. மனிதனைப் பூரணமாக்க வேண்டிய குணங்கள் எவை? கலங்காத அறிவு, அன்பு நிறைந்த நெஞ்சு, நீதியான தீர்மானம் ஆரோக்கிய உடல் கலங்காத அறிவு இல்லாவிடில் அவசரமாக முடிவு செய்துவிடுவோம். அன்பு நிறைந்த நெஞ்சு இல்லாவிடில் சுயநலமுள்ளவராயிருப்போம்.
   நல்லெண்ணம் இருப்பினும் நீதியான தீர்மானம் இல்லாவிடில் நன்மை உண்டாவதினும் தீமையே
   உண்டாகும். உடற்சுகம் இல்லாவிடில் ஒன்றும் செய்ய முடியாது.

   - ஆவ்பரி -

ஸ்ரீ.ஜீவிதா
G.A.Q

# கவிதைத் தொகுப்பு

01 **பண்பு**

ஆயிரம் பேருக்குள் ஒருவனாய்
மிளிர வைப்பது.

02 **பல்கலைக்கழகம்**

கல்வியோடு வாழ்க்கைத் தத்துவங்களையும்
புரிய வைக்கும் இடம்.

03 **மகாத்மா**

இறந்த பின்பும் வாழ்ந்து கொண்டிருக்கும்
உன்னத ஜீவன்.

04 **மனச் சாட்சி**

சம்பளம் பெறாத நீதிபதி.

05 **கனவு**

சொர்க்கம் வரை அழைத்துச்
செல்லும் உன்னத சொப்பனம்.

06 **சோம்பல்**

கோடிக் கணக்கான சொத்தையும்
குன்றுமணியளவு கரைத்து கொடுக்கும்.

07 **யேசு**

உலகிற்காக தன்னை முழுதாய்
அர்ப்பணித்த அற்புத பொக்கிஷம்.

08 **பொல்லு**

கூன் விழுந்த முதியவருக்கு
நம்பிக்கை கொடுக்கும் இன்னொரு கை.

09 **மீனவன்**

துன்ப, துயர ஏக்கங்களை
தனதாக்கிக் கொண்டு வாழக்கற்றவன்.

10 **சிற்பி**

கல்லில் மறைந்திருக்கும் சிலையை
கலை நயத்தோடு நம் முன்
படைத்துக் காட்டும்
அற்புத படைப்பாளி.

11 மெய்ப் பாதுகாவலன்
தன்னலம் கருதாது பிறர் நலம்
காக்கும் சுயநலமில்லா ஜீவன்.

12 ஏமாற்றுக் காரன்
அடுத்தவன் துன்பத்தில் எக்காளம்
விடத்துடிக்கும் சர்ப்பங்கள்.

13 பாடலாசிரியர்
துன்பப்படும் போதெல்லாம்
துவண்டு விடாமல் நாமிருக்க
இறைவன் படைப்பில் ஓர் புத்தூக்கி.

14 கவியரசர்
மறைவாய் இருந்து கருத்துக்குள்
முத்துக் குளிக்க வைக்கும் படைப்பாளி.

15 மெகாசீரியல்
இலட்சியக் கனவுகள் எட்ட நினைப்பவனுக்கு
பாதையின் குறுக்கே நிற்கும் முள்வேலி.

16 பேனா
நம் உள்ளக் கிடக்கைகளின் ஆதங்கத்தை
கருத்தாக வெளிக் கொண்டுவர
கண்ணீர் சிந்தும் தோழன்.

17 பனை
பிறருக்காகவே தன் வாழ்வை அர்ப்பணிக்கும்
அதிசயப் பிறவி.

வை. தங்கச் செல்வி
மட்டக்களப்பு
(B.A)

# அன்பு

"உயிர்களிடத்தில் அன்பு கொள்
எதிரியானாலும் அவனிடம் அன்பு கொள்
எவரிடமும் கோபப்படாதே
எல்லோருக்கும் உதவி செய்"

இது கிறிஸ்மஸ் காலம், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு கிறிஸ்து பிறந்த புனிதமான தினம் இந்த உலகில் நாம் கண்டு, கேட்டு செய்திடும் அனைத்தும் கனவுக்காட்சிகள் போலவும் எதிர்காலம் அதேபோன்று விளிப்பு, உறக்கம், ஆழ்ந்த உறக்க நிலைகளென அனைத்துக் கட்டங்களிலும் ஆத்ம தத்துவமே நிரந்தரமான ஒரே அம்சமாகும். இந்த ஆத்ம தத்தவமே அன்பு, உண்மையில் அன்பு ஆத்மாவில் மட்டுமே பிறந்தது நீங்கள் அன்பினை மட்டுமே வளர்த்துக்கொண்டால் இவ் உலகம் முழுவதும் உங்களது கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடும்.

ஒரு வாளி நிரம்ப நீர் இருந்தால் அதில் இருந்து ஒவ்வொருவரும் ஒரு குவளை நீர் எடுக்கத் தொடங்கினால் அந்த நீர் நிறைந்த வாளி விரைவில் வற்றிவிடும். ஆனால் அன்பு அவ்வாறல்ல ஜோதியைப் போன்றது. சுடரேற்றப்பட்ட ஒரு மெழுகுதிரியினைக் கொண்டு நாம் எண்ணிக்கையற்ற மெழுகுதிரிகளுக்குச் சுடரினை ஏற்றலாம். அவ்வாறு எண்ணிக்கையற்ற மெழுகுதிரிகளுக்குச் சுடரினை ஏற்றினாலும் அந்த முதல் மெழுகுதிரியில் இருந்த சுடர் முடிந்து விடுவதோ அல்லது மங்கிவிடுவதோ இல்லை. அன்பு செலுத்துவோர் அன்பு செலுத்தியவர்களின் பிரிவைக்கண்டு வேதனையுறாமல் இருக்க முடிவதும் இல்லை.

இயேசு சிலுவையில் அறையப்பட்டார். அன்னை மரியாவாள், அந்தக் காட்சியினை காண இயலவில்லை. தாள இயலாது கண்ணீர் உகுத்தாள். அப்பொழுது இயேசு "எதற்காக நீ அழுகின்றாய்? இது இயல்பானதே. எது நடக்க வேண்டுமோ, அது நடந்தே தீர வேண்டும். ஆகவே நீ கண்ணீர் விடக்ககூடாது" என்று தேற்றினார்.

PUBLIC LIBRARY JAFFNA

மகாபாரத போர்க்களத்தில் தன் எதிரிகளாக நிற்கும் கௌரவர்களை அர்ஜுனன் பார்க்கின்றான். அங்கே இரண்டு சேனைகளிலும் இருக்கும் தந்தையாரையும் பாட்டன் மார்களையும், ஆசிரியர்களையும், மாதுவரையும், அண்ணன் தம்பிகளையும், போர்வீரர்களையும், தோழர்களையும், மாமனர்களையும், நண்பர்களையும் பார்த்தான். குந்தியின் மகனாகிய அர்ஜுனன் நிற்கின்ற பந்துக்கள் எல்லோரையும் உற்றுப்பார்த்து பேரிரக்கம் படைத்தவனாய் விசனத்துடன் இவ்வாறு பகர்ந்தான். "கிருஸ்ணா! போர் புரிவதற்கு கூடியுள்ள உற்றாரைப் பார்த்து என் உறுப்புக்கள் சோர்வடைகின்றன, வாயும் வறள்கின்றது, என் உடலில் நடுக்கமும் மயிர்ச்சிலிர்ப்பும் உண்டாக்கின்றன, கையிலிருந்து காண்டீபம் நழுவுகின்றது, மேலெல்லாம் தோலும் எரிகின்றது. கேசவா! நிற்க இயலவில்லை, மனது சுழல்கிறது, கேடுடைய சகுணங்களையும் காண்கிறேன். கிருஷ்ணா! போரிலே சுற்றத்தாரைக் கொல்லுவதில் நன்மையை நான் காண்கிறேன் இல்லை, வெற்றியையும், ராஜ்யத்தையும், இன்பங்களையும் நான் வேண்டுவதில்லை" அர்ஜுனனின் தடுமாற்றம் நமக்கு நன்கு விளங்குகின்றது. அன்பின் காரணமாக சுற்றத்தார்கள் பிரிதலின் பொருட்டு அர்ஜுனன் துயருறுகின்றான். அவனது துயரை நீக்கும் பொருட்டு அதாவது அர்ஜுனனின் அறியாமையைப் போக்கி அவனை தெளிவுறச் செய்வதே பகவான் கிருஸ்ணனின் கடமையாக அமைகிறது.

மனிதன் பிறக்கும் போதே அன்பைச் சுமந்துகொண்டுதான் பிறக்கின்றான். துயரத்தில் ஆழ்ந்த மனிதன் செயல் இழந்து போகிறான் செயழிழந்து போகும் மனிதன் மௌனத்தை நாடுகின்றான். மௌனத்தில் சிந்தனை பிறக்கின்றது. சிந்தனையில் தத்தவம் பிறக்கிறது. தத்தவம் மனிதனை தெளிவாக்குகின்றது. அதனால் தான் சோகத்தில் மூழ்கியிப்பருப்பவர்கள் தத்தவவாதிகளாவும் தத்துவவாதிகள் சோகத்தை விரும்புவர்களாகவும் இருக்கின்றார்கள், உண்மையை அறிந்தால்தான் மனிதன் தெளிவடையமுடியும். மனிதன் தெளிவடைகின்றான்.

இந்த உடலானது நீர்க்குமிழியைப்போன்றது மனமோ பித்துப்பிடித்த குரங்காகும். உடல் விரைவிலோ, பின்னரோ அழியவே போகின்றது. ஆகவே நீங்கள் இந்த உடலினை நம்புதல் கூடாது. ஏன் உங்கள் மனதினையும் நம்புதல் கூடாது. எது எப்படி இருப்பினும் நீங்கள் வாழும் காலம் வரை உங்கள் உடம்பினை நீங்கள் பாதுகாக்கவேண்டும். அதன் காலம் முடிய அது தானே வீழ்கிறது. இந்த உலகில் ஒன்று மட்டுமே நிரந்தரமாக உள்ளது. அதுவே ஆத்மா மக்கள் "எனது எனது", "நான் நான்" என்றெல்லாம் கூறுகின்றனர் நான் என்ற இந்த ஒற்றை எழுத்தே ஆத்மா ஆகும்.

ஒரு மனிதனுக்கு இரண்டு மனங்கள் இருந்தால் அவன் குழப்பமுடையவனாகவும், அறியாமை கொண்டுள்ளவனாகவும் கருதப்படுவான். இரு நிலைப்பாடுகள் உள்ள மனதைப் பெற்றவன் அரைக்குருடன். ஆகவே ஒரு முகமாகக் குவிக்கப்பட்ட நம்பிக்கையினையும், பக்தியினையும் ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிலும் நம்பிக்கையினை நீங்கள் ஒரு முறை வளர்த்துக் கொண்டுவிட்டால் அது உங்களுடைய மரணம் வரை நீடித்திருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக மக்கள் தங்களுடைய நம்பிக்கையை அடிக்கடி மாற்றி வருகின்றனர். அவர்கள் துன்பத்தில் அழும் பொழுது ஒரு வகையிலும், சிறப்பான நல்ல காலகட்டத்தினை அனுபவிக்கும் பொழுது வித்தியாசமான மற்றொரு வகையிலும் நடந்து கொள்கின்றனர். இது நடந்திடக்கூடாது. அன்பு, அன்பு இந்த குணாதிசயம் ஒன்று மட்டுமே மாற்றம் இல்லாதது. அத்தகைய மாற்றம் இல்லாத அன்பினை ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டும். எது நடந்தாலும் அது இறைவனது தீர்மானத்தின் படியே நடக்கிறது. நீங்கள் உங்களுடைய செருக்கினால் நீங்களே அதனை செய்வதாக எண்ணுகின்றீர்கள். நீங்கள் செய்பவர் அல்ல. நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்? அங்கு உண்மையில் நீங்கள் இல்லை. உங்களுடைய அகத்தின் தன்மையே, உங்களுடைய அகத்தின் குரலே, உண்மையில் சூழ்நிலைக்குப் பதிலளிக்கிறது. ஆகவே நீங்கள் என்பது

உங்களுடைய "ஆத்மா". ஒருவருடைய அகத்தின் தன்மை மீதான நம்பிக்கையே இவ்வுலகில் உள்ள ஒவ்வொன்றிற்கும் அடிப்படையாகும்.

இயேசு, மீனவர்களுக்குப் பல வகையில் உதவியுள்ளார். அவர்களுக்கு ரொட்டி கொடுத்தார். ஒரு முறை ஒரு மீனவனால் ஒரு மீனைக்கூடப் பிடிக்கமுடியவில்லை அவர் அப்பொழுது அவனை அழைத்து "மீன்வலையை எடுத்துக்கொண்டு என்னை பின்தொடர்ந்து வா" என்று கூறினார். அவர் மீன்வலையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வீசுமாறு கூறினார். பெருந்த எண்ணிக்கையில் மீன்கள் அந்த வலையில் சிக்கின, மீனவர்களால் மீன் அதிகம் இருந்த வலையினை இழுக்கவே முடியவில்லை. ஆகவே தெய்வத்தினால் தனது தெய்வீக தீர்மானத்தைக் கொண்டு எதையும் செய்திட இயலும் ஒவ்வொன்றும் இறைவனது பரிசு மட்டுமே அன்றி வேறில்லை. இந்த உண்மையை ஒருவர் உணர்ந்து கொண்டு அதற்கேற்ற வகையில் நம்பிக்கையினை வளர்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் நல்ல கால கட்டதினை அனுபவித்து வந்தால் அதுவும் இறைவனுடைய பரிசே. மாறாக துன்பம் நிரம்பிய கால கட்டத்தைக் கடக்க நேர்ந்தால் அதுவும் இறைவனுடைய பரிசே அத்தகு சீரான நம்பிக்கையினை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். மலேரியாக்காய்ச்சலினால் நீங்கள் அவதிப்பட்டால் நீங்கள் கசப்பான மாத்திரைகளை உட்கொண்டே தீர வேண்டும். அது உங்கள் நன்மைக்கே.

நாம் பல்வேறு ஆசைகளை வளர்த்துக்கொள்கின்றோம். ஆனால் அவை எல்லாம் கலைந்து செல்லும் மேகக்கூட்டத்தினைப் போன்றது. பல நாடுகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து பெரும் செல்வத்தினையும் சேர்த்த மஹா சக்கரவர்த்தியான அலெக்சாண்டரும் கூட இறந்த பின்னர் தன்னுடன் ஒரு சிறிய பொருளைக் கூட கொண்டு சென்றிட இயலவில்லை. வெறும் கைகளுடனேயே அவர் இவ் உலகை விட்டுச் செல்ல வேண்டியிருந்தது. இந்த உண்மையை எடுத்துக்காட்டுவதற்காகத் தனது இறந்த உடலை ஊர்வலமாகத்

தனது தலை நகரத்து வீதிகளின் வழியே எடுத்துச் செல்லும் பொழுது தனது இரு கைகளையும் விண்ணைநோக்கி இருக்குமாறு திருப்பி வைக்கும்படி தனது அமைச்சர்களிடம் கட்டளை இட்டான். இந்த வித்தியாசமான விண்ணப்பத்திற்கான காரணத்தினை அறிந்து கொள்ள அமைச்சர்கள் ஆவல்கொண்ட பொழுது அவன் "நான் பல நாடுகளை வென்றுள்ளேன், பெருத்த அளவில் செல்வங்களைச் சேர்த்துள்ளேன் எனது கட்டுப்பாட்டின் கீழ் ஒரு மாபெரும் படையே உள்ளது. ஆயினும் நான் இந்த உடலை விட்டுச்செல்கின்ற காலத்தில் எவரும் என்னுடன் வரவில்லை, நான் வெறும் கைகளுடனேயே செல்கின்றேன். இது மக்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டப்பட வேண்டும்" என்று விடையளித்தான்.

அன்பே கடவுள், அன்பில் வாழுங்கள் எங்கள் வாழ்வு முழுவதும் அன்பினால் வளர்க்கப்படுகின்றது. அன்பும் உண்மையும் ஒன்றாக செல்லும் போது அதன் விளைவு அஹிம்சை அன்பு இருக்கும் இடத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடமாட்டார்கள், நாம் எவர் மீதும் கோபம் கொள்ள மாட்டோம். அன்பினை வளர்த்துக் கொள்ளும் பொழுது அனைத்து மக்களையும் நாம் சகோதரர்களாகவே கருதுவோம். நாம் எவரையேனும் சந்திக்கும் போது "வணக்கம் சகோதரா" என்று கூறினால் எமது எதிரி கூட "வணக்கம் சகோதரா" என்று கூறித் தனது எண்ணத்தை வெளிப்படுத்துவார்.

நன்மையும் தீமையும் சேர்ந்தே இருக்கும். எவராலும் அவற்றை பிரித்திட இயலாது. நீங்கள் நன்மை மற்றும் தீமையினை ஒன்றில்லாது மாற்றதினை காண்பது அரிது.

நாம் வாழ்வது சொற்ப காலம்தான் அக்காலத்திலாவது எவரையும் வருத்தாது, துன்புறுத்தாது எப்பொழுதும் எல்லோரையும் நேசிக்ககக்கூடியவர்களாக இருக்கக் கூடிய மனநிலையை எமக்குக் கொடுக்கும்படி அந்த பரம்பொருளிடம் நாடி வேண்டுவோமாக.

"அன்புடன் நாளைத் தொடங்குங்கள்
அன்பால் நாளை நிரப்புங்கள்
அன்புடன் நாளை போக்குங்கள்
அன்புடன் நாளை முடிவுறுத்துங்கள்"

K.Thulasithas (B.Sc)
உளசமூகப்பணியாளர்,
அஞ்சலியகம்.

# புத்தகத்தைக் காப்பதெப்படி

1 புத்தகத்தை அதிகமாக பிரிக்காதீர்.

2 பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்.

3 மூலைகளை மடிக்காதீர்.

4 தூக்கம் வரும்போது எடுத்து வைக்கமறவாதீர்.

5 தலையணையாக வைத்துக் கொள்ளாதீர்.

6 வைக்கும் போதும் கொடுக்கும் போதும் வீசியெறியாதீர்.

7 ஆளின் மீதோ நிலத்திலோ அடிக்காதீர்.

8 குழந்தைகளிடம் கொடாதீர்.

9 குறிப்புகளும் கோடுகளும் எழுதாதீர்.

10 எண்ணெய் தண்ணீர் பட்ட கையோடு தொடாதீர்.

"புத்தகமே பொன் தரும்"



ஆக்கம் :- கி யோ.கிருத்திகா
அஞ்சலி அகம்
தரம் 9
யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்

# அறிந்து கொள்ளுங்கள்

எறுப்புக்கு கால் அறு
ஈயின் ஆயுள் பத்து நாள்
ஈ ஒரு தடவையில் 120 - 150 முட்டைகள் இடும்
பறவை இனத்தில் ஆண்தான் கவர்ச்சியானது

எண் கோலங்கள்

| | | |
|---|---|---|
| 1 2 3 4 5 6 7 9 x 9 | = | 111111111 |
| 1 2 3 4 5 6 7 9 x 18 | = | 222222222 |
| 1 2 3 4 5 6 7 9 x 27 | = | 333333333 |
| 1 2 3 4 5 6 7 9 x 36 | = | 444444444 |
| 1 2 3 4 5 6 7 9 x 45 | = | 555555555 |
| 1 2 3 4 5 6 7 9 x 54 | = | 666666666 |
| 1 2 3 4 5 6 7 9 x 63 | = | 777777777 |
| 1 2 3 4 5 6 7 9 x 72 | = | 888888888 |
| 1 2 3 4 5 6 7 9 x 81 | = | 999999999 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | x | 1 | = | 1 |
| 11 | x | 11 | = | 121 |
| 111 | x | 111 | = | 12321 |
| 1111 | x | `1111 | = | 1234321 |
| 11111 | x | 11111 | = | 123454321 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1 | x | 7) | + | 1 | = | 8 |
| (11 | x | 7) | + | 11 | = | 88 |
| (111 | x | 7) | + | 111` | = | 888 |
| (1111 | x | 7) | + | 1111 | = | 8888 |
| (11111 | x` | 7) | = | 11111 | = | 88888 |

V. Sumathy,
G.C.E (A/L) 2009,
Methodist Girls high School

## அமைதி வரும் ஆனா வராது

என் உள்ளத்தில் அமைதியை வளர்த்து,
அயலவனுக்கு அமைதியை அளித்து,
பகைவனுக்கு அமைதியை கொடுத்து,
உலகில் அமைதியை ஏற்படுத்து.

இன்று உலக அரங்கில் சில வல்லரசுகள் அமைதிப் போக்கில் அமைதியை ஆதரித்தும், மற்றும் சில வல்லரசுகள் ஆயுதக்கலாச்சாரத்தை உருவாக்கி ஆயுதங்களை விற்று அமைதியைக் குலைத்து வன்முறைக் கலாச்சாரத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றது. ஆனால் உலக மக்கள் நீதியான அமைதியை தேடி அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

சமாதானம் வருமா? உள்ளத்தில் அமைதி கிடைக்குமா? என்று கேட்டுக் கேட்டு சோர்ந்து போன எம் மக்களுக்கு, எப்பொழுது அமைதி வரும்? கடவுளிடம் பிராத்தித்துக் களைத்த எம் மக்களுக்கு ஏன் இன்னும் அமைதி கிடைக்கவில்லை எனது மனம் அமைதியாய் இல்லை. எப்பொழுதும் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. நாட்டிற்கு அமைதி கிடைக்காமைக்கு நானும் ஒரு வகையில் பொறுப்பு. எனது கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை. நானும் பொறுப்பாக நடந்து கொள்ளாமையே காரணம். இதை நான் இன்னும் சரியாக புரிந்து கொள்ளவில்லை. “என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன். நான் எங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல” என்று இயேசு கூறினார். எமது நாட்டிலும் பல அமைதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இறுதியில் போர் பேரழிவை ஏற்படுத்தி முடிவடைந்தது. எமது நாட்டிற்கு அமைதி வரும் ஆனா வராது இதற்கு காரணம்: பல இடர்கள், எனது சுயநலம், சவால்கள், சோதனைகள் அமைதி வெறுமனே வார்த்தைப் பிரயோகத்தால் மட்டும் வராது மாறாக அவற்றை செயலில் காட்ட வேண்டும்.

அன்று, இயேசுவின் இறையாட்சிக்கு தடையாக பலர் இருந்தார்கள். அதே போன்று இன்றும் பலர் எம் மத்தியில் உள்ளனர் நாங்கள் அமைதியாய் இருந்து மற்றவர்களுக்கு

அமைதியையும் சமாதானத்தையும் வழங்க அதற்கான சூழலை அமைக்க, உழைக்க நான் என்ன செய்கின்றேன்? அமைதி வரும் ஆனால் அதற்கான ஒரு முயற்சியையும் நான் செய்யவில்லை என்றால் அமைதி வராது. குடும்பத்தில் சமூகத்தில், மற்றவர்களைப் பற்றி அவதூறு பேசி அயலவரின் பெயருக்கு களங்கம் விளைவித்து சுயநலத்துடன் செயற்பட்டால் அமைதி நிலைக்காது.

இன்று அமைதி தேவை என்றால் அது முதலில் என்னில் எனது சிந்தனை, சொல், செயலில் பிறக்க வேண்டும். எங்கு வன்முறை, அநீதி, போராட்டம், சுயநலம், ஏற்றத்தாழ்வு, வேற்றுமை, பகிராத் தன்மை உள்ளதோ அங்கே அமைதி நிலைக்காது. சகோதரத்துவத்தை உருவாக்கி, சமத்துவத்தை நிலைநாட்டினால் சமாதானம் அமைதி உண்டாகும். பகிர்வு இல்லை என்று சொன்னால் அங்கே ஏற்றத்தாழ்வு வரும், வேற்றுமை தலைவிரித்தாடும், அடுத்தவரை வெல்ல வேண்டும் என்ற எண்ணம், அதிகாரப் போக்கு, ஆணவம், காணப்படும் இங்கு அமைதி நிலைகுலைகின்றது.

யார் யார் அமைதிப் பணிக்கு, அமைதி ஏற்படுத்துவதற்கு தடையாக இருக்கின்றார்களோ அவர்கள் மனித மாண்பிற்கு எதிராக மனிதர்களை மதிக்காதவர்களாக இருப்பார்கள். அமைதி வரும் ஆனா வராது ஏனென்றால் நான் சுயநலம் உடையவனாகவும் அதிகாரப்போக்கு உடையவனாகவும் எனது உள்ளத்தில் அமைதியை தொலைத்தவனாகவும் இருக்கின்றேன்.

அமைதியே என் உள்ளத்தில் வராயோ!
எனக்கு நிம்மதி தராயோ!
உலகிற்கு அமைதி மலராதோ!
அமைதியின் வேந்தனே என்னில் பிறப்பாயோ..?

அருட்.சகோ.இ.செ.விஜேந்திரன்.அ.ம.தி

# நான் ஒரு பறவையானால்

நேற்று மாலை பூந்தோட்டத்தில் நீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு அழகிய கிளி எங்கள் முற்றத்தில் இருந்த மாமரத்தில் வந்திருந்தது. அதன் அழகு என்னைப் பெரிதும் கவர்ந்தது. அது கீ. கீ என்று கீச்சிடுவதே தனி ஆனந்தம். இதைப் போன்று நானும் ஒரு பறவையானால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும் என்று எண்ணினேன். என் கற்பனை விரிந்தது.

நான் ஒரு பறவையானால் வானவெளியில் சிறகுகளை அகல விரித்து ஆனந்தமாகப் பறந்து செல்வேன். விரும்பிய வேளைகளில் விரும்பிய இடங்களில் அமர்வேன். எவ்வித கட்டுப்பாடும் எனக்கிருக்காது. இந்த உலகில் மனிதர்கள் படும் துன்பங்கள் எதுவும் என்னை தொடர மாட்டா, சுதந்திரமாக எங்கும் பறந்து செல்வேன்.

உயர்ந்த மலைகள், பச்சைப் பசேலெனக்காட்சி தரும் வயல் வெளிகள், பழத்தோட்டங்கள், வானலாவிய மரங்கள் அனைத்திலும் நான் சென்று அமர்ந்து ஆனந்தமடைவேன். உணவைப்பற்றிய கவலையே எனக்கில்லை. என்னத்தை உண்போம் என்னத்தை உடுப்போம் என மனிதர்கள் சதா சஞ்சலப்படுகிறார்கள். பொருட்களைத் தேடிச் சேர்த்து வைக்க முற்படுகிறார்கள். பறவை ஆகிய எனக்கு இத்தகைய சஞ்சலம் எதுவுமேயில்லை. நாளைய உணவு பற்றி நான் சிந்திப்பதேயில்லை. காய்கறித் தோட்டங்கள், நெல்வயல்கள், பழத்தோட்டங்கள் ஆகியன தான் எங்கும் காணப்படுகின்றன. ஏன் நான் கவலைப்பட வேண்டும். அவற்றில் விரும்பிய போது என் உணவைத் தேடிக் கொள்வேன். இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறுவேன். உறங்குவதற்கு மாடி வீடுகளோ,குடிசைகளோ எனக்குத் தேவையில்லை. என் சகோதரர்களுடன் உல்லாசமாக மர உச்சிகளில் உள்ள கூடுகளில் படுத்துறங்குவேன். அதிகாலை வேளைகளில் எழுப்புவேன் இதோ! மாலையாகிவிடுகிறது நான் என் கூட்டுக்குச் செல்ல வேண்டும். என்சகோதரர்கள் அதோ வருகிறார்கள் அவர்களுடன் நானும் செல்கிறேன்.

இப்படி எண்ணிய வண்ணமிருந்த போது அம்மாவின் அழைப்பு இடையில் கலைத்துவிட்டது. இதோ வருகிறேன் என்று கூறியடி அம்மாவிடம் ஓடினேன். நான் ஒரு பறவையாகும் ஆசைதான் தவிர வேறு ஏதுவும் இல்லையே?

மா.நிலோஜன்
யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்
தரம்-5

# அன்னை ஓர் ஆலயம்

அன்னை ஓர் தெய்வமப்பா
அவள் இல்லையேல் இவ்வுலகில்
யாருமில்லையப்பா
உள்ளம் எனுங் கோயிலுக்குள் - அவள்
உரிமை கொள்ளும் முதல் தெய்வமப்பா

பத்துமாதம் எமைச் சுமந்தாள்
படுக்கையை தான் இழந்தாள்
பகலோடு இரவுமாக சேர்த்து
பத்தியங்கள் பல காத்து நின்றாள்

முந்நூறாம் நாளன்று - முழுமையாக
முத் தொன்றை பெற்றெடுத்தாள்
பாலாக உதிரமதை பதமாக உறைய
வைத்தது
பாலகன் அருந்த பாசமாய் ஊட்டிடும்
தெய்வம்பா

செல்வி மதனரூபி பாரதிதாசன்
(H.N.D.A)
பிருந்தாவனம்
மகாத்மாவீதி, அல்வாய் வடக்கு

# உலகியல் வாழ்வில் நின்று எவ்வாறு பற்று நீங்கி வாழ்வது?

உலகியல் வாழ்வில் நின்றால் அதில் ஊறாதே தாமரை இலையில் தண்ணீர் விழுவது போல் இருத்தல் வேண்டும். நீர்த்துளி கூட அழகாக இருக்கின்றது. அதுபோல் நீ வைத்திருக்கும் பொருளுக்குக் கூட அழகு வருகிறது. ஆசை, அவா, இரண்டும் துன்பத்திற்குக் காரணம் என புத்தர் சொன்னார். உதாரணமாக: வேண்டும், வேண்டும் என ஆசையை வளர்த்துத் துரத்திச் செல்லாமல். இருப்பதை வைத்துக் கொண்டு மன நிறைவோடும் நிம்மதியோடும் வாழுதல் வேண்டும். சாதிக்க வேண்டும் என வாழுதல் நிம்மதி தருமா?

சாதிக்க வேண்டும் என நினைக்க வேண்டும், ஆனால் சாதிக்கத்தான் வேண்டும் சாதித்துக் காட்டுகிறேன், என்று சொல்லக் கூடாது. நீ சாதித்து நான்கு பேருக்கு உதவ வேண்டும் அப்படிச் சாதித்தால் வாழ்க்கை நிம்மதியாக அமையும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற திருக்குறள் மூலம் நீ உலகத்தில் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ். துறவிகளுக்கு உதவி செய், வறியவருக்கு உதவி செய், இறந்தவருக்கு உதவி செய், விருந்தோம்பு, அன்பு, இனிமை, நடுநிலமை, ஒழுக்கம், கெட்டதைச் செய்ய அஞ்சி வாழ், தவம், உண்மை, போன்ற உலகியல் வாழ்வோடு வாழ்.

உலக வாழ்வோடு நம்பிக்கை கொண்டு மன நிறைவை வளர்க்கக் கற்றுக் கொண்டு தன்னையும் தன்னைச் சூழ உள்ளவர்களையும் வளர்த்தெடுக்க உதவுதல் தான் வாழ்வதாகும். பொருள் நிலை வாதம் இல்லறத்தில் தொடங்கட்டும் இல்லறம் அறமாக இருக்கட்டும். நம்பிக்கையோடும் மனநிறைவோடும் தன்மையும் தன்னைச் சூழ உள்ளவரையும் வளர்த்தெடுக்க வேண்டும்.

க.சுஜாதா
உளசமூகப் பணியாளர்,
அஞ்சலியகம்.

# இளைஞர் மனப்பாங்கு விருத்தி

மனித வளர்ச்சிப்படிகளின் பொற்காலமாகத் திகழ்வது இளைமைக்காலமாகும். மனித வாழ்வில் ஒரு முறைமட்டும், மலரும் இப்பருவம் தேடும் பருவம் என (Thedore Litz) தியோடர் லிட்ஸ் கூறுகின்றார். என்ன? எது?ஏன்? எப்ப? எனத் துருவித்துருவி ஆராயும் பருவமாக இது அமைகின்றது. இன்னொரு விதத்தில் நோக்கின் கண்ணாடிப் பாத்திரம் போன்றதாகும் கண்ணாடிக் கீறலோ அல்லது விரிசலோ ஏற்பட்டுவிட்டாலும் அல்லது அது உடைந்து விட்டாலும் அது பயனற்றதாகி விடுகின்றது. இளைஞர்களும் அத்தகையோரே. இளைஞர் மனதில்காயம் ஏற்பட்டாலும், விரக்தி ஏற்பட்டாலும் மாறாக விரிசல் கண்டாலும் அது பல்வேறு பிரச்சினைகலாக அமைந்துவிடுகின்றது. ஒரு நாட்டின் முது கெலும்பு போன்றவர்கள் இளைஞர். நாட்டின் வருங்கால தலைவர்கள் சமூகத்தின் அரும் பெரும் சொத்து இவர்கள். ஒருநாட்டை ஆக்கவும் அழிக்கவும் கூடிய சக்தி வாய்ந்தவர்கள் எனவே இவர்களை சரியாக வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பு சமூகத்திற்குண்டு இந்தப்பருவத்தில் இவர்களின் மனப்பாங்குகள், உணர்வுகள். ஆரோக்கியமானவையாக இருப்பது அவசியம்.

Youth எனும் பதத்திற்கு எழுத்து வாரியான ஒரு விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.

Y - Yearning பேரார்வம், செயல் செய்வதில்

O - Obedience கர்வம், கீழ்படிவு

U - Understanding - புரிந்து கொள்ளல்

T - Thoughtfulness - சிந்திக்கும் மனப்பாங்கு

H - Honesty நேர்மை

இந்தவழியிலே தான் இளைஞர்கள் மனப்பாங்கு விருத்தியடைய வேண்டும் முன்னேற்றத்திற்குத் துணையாகப் பக்கபலமாக அமையும். சமூகம் இளைஞரைச் சீரழிக்கின்றதா? அல்லது இளைஞர் சமூகத்தைச் சீரழிக்கின்றார்களா? என்பது முக்கியமல்ல. இளைஞரைப் பொறுத்தவரை சமூகத்திற்கும்

அவர்களை வழிநடத்தும் பாரிய பொறுப்புண்டு. இளைஞர் கடும் சமூகமேம்பாட்டிற்கு உழைப்பவராகத் தங்களை மாற்றிக் கொள்ளல் அவசியம்.

## Yearning பேரார்வம்

பொதுவாக இளைஞர்கள் துடிப்புள்ளவர்கள். மலையைத் தலையால் முட்டி உடைக்கலாம் என எண்ணும் வயதுடையவர்கள். எதையும் அறிவதில் பேரார்வம் காட்ட முயற்சி எடுப்பர். இந்தப் பேரார்வம் அறிவு, ஒழுக்கம் சார்ந்தவையாக அமையுமிடத்து அது முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கின்றது. மாறாக தவறான செயற்பாடுகளை அறிவதில் பேரார்வம் காட்டும் போது அல்லது வன்முறைகள், நெறிதவறிய கொள்கைகளை அறிவதில் பேரார்வம் காட்டும்போது அவை அறிவதில் சூழ்நிலைகளை ஏற்படுத்திவிடுகின்றன. இவர்களின் ஆர்வத்திற்கு துணை போகின்றவர்களாகப் பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள், சமூகத்தினர் அமைவது அவசியம். தவறான திரைப்படங்கள், புத்தகங்கள் படிப்பதில் காட்டும் பேரார்வம் அவனது வாழ்க்கையே சீர்குலைக்கும் இச்சந்தர்ப்பத்தில் சரியான வழிகாட்டல்களும், நெறிப்படுத்தல்களும் இளைஞர்களுக்குத் தேவைப்படுகின்றன.

## கீழ்ப்படிவு (Obedience)

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" எனும் திருவள்ளுவர் வாக்கிற்கேற்ப இளைஞர் சமூகத்திற்குக் கீழ்ப்படிவு எனும் மனப்பாங்கு அவசியம் தேவை பெரியோரைக் கனம் பண்ணல், சமூகத்தினை மதித்தல் வெளிநாடுகளில் பணிபுரிவோராயின் அவர்களின் விழுமியங்களை மதித்தல் என்பன இளைஞரால் கைக்கொள்ளப்பட வேண்டும். கீழ்ப்படிவு எனும் போது தாழ்வு மனப்பான்மையையும் இங்கு கூட்டிக் காட்டவேண்டும். தாழ்வுச்சிக்கலில் மாட்டிக் கொள்ளும் இளைஞன் வாழ்வில் முன்னேறமுடியாது. நீ சம்மதித்தால் அன்றி யாரும் உன்னில் தாழ்வு மனப்பான்மையைக் காணமுடியாது என்பர் அறிஞர். இளைஞன் ஒருவன் முதலில் தன்னைப்புரிந்து

கொள்ள வேண்டும் தன்னை அறிபவன் உள்ளொளி பெற்றவன் ஆவான், தன்னையும் தன் உணர்வுகளையும், தன் திறன்களையும் விளக்கிக் கொண்டு அவற்றை வெளிப்படுத்தல் வேண்டும். வெளிப்படுத்தும் முறை பணிவானதாக அமையவேண்டும். இவ்வாறாக இல்லாத நிலையில் சமநிலையின்மை ஏற்படுகின்றது. இதனால் மனவெழுச்சார் பிரச்சினைகளுக்கு இளைஞர் முகங்கொடுக்கின்றனர். "தாழ்ந்தவன் உயர்த் தப்பவொன்" என்பது தேவவாக்கு.

## புரிந்து கொள்ளல் (Understanding)

சமூகத்தில் பல பிரச்சினைகள் ஏற்படக்காரணம் புரிந்துணர்வு இன்மையாகும். குறிப்பாக இளைஞர் மத்தியில் சரியான புரிந்துணர்வு இல்லை எனின் உயிராபத்துகளும், வன்முறைகளும், தீவிரவாதப் போக்குகளும் தலை தூக்குவதை அவதானிக்கலாம். "உன்னையே நீ அறிவாய்" என்பது தத்துவ ஞானிகள் வாக்கு இளைஞன் ஒருவன் தன்னையும் புரிந்து கொள்ளும் சுயமதிப்பீடு மிக மிக அவசியம் அதே வேளை சமூகம், பிறர் பற்றிய கணிப்பும் சரியாக அமைய வேண்டும் எனக்கு அடித்தால் வலிக்கும் அதேபோல் பிறருக்கு அடிக்கும் போதும் வலிக்கும் என்பதை உணரவேண்டும். தம்மையும் தம் உணர்வுகளையும் விளங்கிக் கொள்வதுடன் தம் உணர்வுகளைப் பரஸ்பரம் வெளிப்படுத்தாத காரணத்தினால் பல பிரச்சினைகளுக்குள்ளாகி தம்மையும் சமூகத்தையும் பாதிப்பவராக அமைந்து விடுபவராகவும் இவர்கள் அமைவதுண்டு. எனவே இளைஞர் மத்தியில் பரஸ்பரம் நல்ல புரிந்துணர்வு இருக்க வேண்டும்.

## சிந்திக்கும் மனப்பான்மை (Thoughtfulness)

மனிதனின் எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன. டிரைன் என்ற தத்துவமேதை "எண்ணம் வலிமை மிக்கது. முடியும் என்ற எண்ணங்களைத் திரும்பத் திரும்ப எண்ணுவதன்மூலம் வாழ்வில் ஒரு நம்பிக்கை ஏற்படும்" என்கிறார்


நற்சிந்தனைகளே வாழ்வின் ஏற்றத்திற்குகந்தவை நீர் நல்லது. ஆனால் சாக்கடையில் ஓடினால் பலனில்லை அது போல சிந்திப்பது நன்று ஆனால் அவை ஆரோக்கியமான சிந்தனைகளாக அமைய வேண்டும். சிந்தனை செய்வதும், புன்னகை புரிவதும் கடவுள் மனிதனுக்கு மட்டும் அளித்த பெருங்கொடைகள். நற்சிந்தனையை வளர்க்க நல்ல நூல்கள், நல்ல திரைப்படங்கள், பெரியோரின் உரைகள், நல்ல நண்பரின் பழக்கம் என்பன உதவும் சிந்தனை செய்தால் தீவினை அகன்றிடும் என்றார் கவிஞர் கண்ணதாசன். இன்று சமூகத்தில் இளைஞர் பலர் கண்டிக்கப்படுபவராகவும், விமர்சனத்துக்குரியவராகவும் அமைந்திருப்பதைக் காணலாம். "நீயும் ஒரு மனிதன் என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் காரணம் சரியாகச் சிந்தனை செய்து செயற்படாது தீவிரமாக எடுக்கும் முடிபுகளே. எனவே சிந்தித்துச் செயலாற்றும் மனப்பாங்கை இளைஞர் வகுத்துக் கொள்ள வேண்டும்.

## நேர்மை Honesty

இளைஞர்கள் வாழ்க்கையின் பொருத்தமான விழுமியங்களைக் கைக்கொள்ளும் போது நேர்மை அங்கே பிறப்பதை அவதானிக்கலாம். ஒழுக்கம் சார்ந்த விழுமியங்கள் சமூகச் சீர்கேட்டை அறவே ஒழித்துவிடும். வீட்டில், சமூகத்தில் பணிபுரியும் இடங்களில், அயலவருடன் எனத் தொடர்புகள் விரிவடையும் போது நேர்மையுடன் உறவாடுதல் உகந்ததாக அமைகின்றது. வீட்டிலும் சமூகத்திலும் மதிப்புப் பெற நேர்மை உதவுகின்றது. எந்த ஒரு பணியையும் நேர்மையுடன் செய்யும் போது அதற்கான மதிப்பே தனியானதாகும். பலரின் நன்மதிப்பும், மரியாதையும் இதனால் கிடைக்கின்றன. சமூகத்தில் கண்ணியம் மிக்கவராகப் போற்றப்படவும், பொறுப்புகளை ஒப்படைக்கும் நம்பிக்கைக்குரியவராகவும் நேர்மைவழி சமைத்துக் கொடுக்கின்றது. இந்தப் பண்பையும் பெற்றோரும், கல்விச்சாலைகளும்

நண்பர்களும் வளர்க்கமுடியும். இன்று உலகின்பல்வேறு பிரச்சினைகளுக்கு சரியாக வளர்க்கப்படாத இளைஞர் சமூகமே காலாக அமைந்துவிடுவதை நாம் காண்கின்றோம். குடும்பத்தினதும், சமூகத்தினதும், நாட்டினதும் பிரச்சினைக்குரியவர்களாக இளைஞர் இருப்பதற்கு இளைஞர் மாத்திரமல்ல மேற்கூறப்பட்ட எல்லா வகையினருமே காலாக அமைந்துவிடுகின்றனர். சரியான முறையில் இளைஞர் வழிநடத்தப்படும் போது அவர்கள் மனப்பாங்குகள் சீராக்கம் பெறும்போது குடும்த்துடன் நாட்டினதும் சிறந்தபங்களிப்பைச் செய்பவராக இளைஞர் அமைகின்றனர். இளைஞர் என்ற வொரு சொத்தைப் பேணி பாதுகாத்து வழிநடத்துதல் சமூகத்தின் பாரிய பொறுப்பாகும்.

திருமதி. பி..எவ்.சின்னத்துரை
ஓய்வு பெற்ற அதிபர்



## கிறிஸ்தவ வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணிகள் நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே!

மனித வாழ்வு நம்பிக்கையில் கட்டப்பட்ட ஒரு வாழ்வு. நம்பிக்கையில்லா மனிதன் உண்மை மனிதனே அல்லன், எதிர்காலத்தை நோக்கி வாழ்தலே மனிதனின் உண்மை இயல்பு" என்று கூறுகின்றனர். புளோக் மற்றும் ஷார்டேன் என்னும் அறிஞர்கள் இறை நம்பிக்கையில் மனிதன் தன் வாழ்வின் உட்பொருளை அறிந்து, எதிர்காலத்தை எதிர்நோக்குகின்றான். அதனால் தான் மனித வாழ்வு எதிர்பார்ப்பின் வாழ்வு என்று அழைக்கப்படுகின்றது. மனிதன் தான் வாழும் இவ்வுலகில் எத்தனையோ குறைபாடுகளைக் காண்கின்றான். சமுதாயத்தில் அநீதிகளைக் கண்டு கலங்குகின்றான். ஆனால் இக்குறைபாடுகளும், அநீதிகளும் ஒருநாள் மறைந்தே தீரும் என்ற ஓர் எதிர்பார்ப்பும், நம்பிக்கையுமே அவனுக்கு உறுதியான உள்ளத்தை வழங்குகின்றது.

தொன்று தொட்டே கிறிஸ்தவ மறையானது நம்பிக்கையின் மறையாக, கிறிஸ்தவ வாழ்வானது நம்பிக்கை நிறைந்த வாழ்வாக இருந்து வருகிறது. ஏனெனில் குழப்பம் நிறைந்த உலகிற்கு கிறிஸ்துவின் பிறப்பு புதிய நம்பிக்கையைத் தந்தது. முதல் பெற்றோரின் குற்றம் தொடக்கம் மீட்பரின் திருவருகை வரை மெசியா பிறப்பார். பிறந்து மீட்பார், வாழ்வை அளிப்பார் என்ற நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் யூதமதம் வளர்ந்து வந்தது. பல நூற்றாண்டுகளாக பலவாறு முன்னுரைக்கப்பட்டு, செழிப்பான வாழ்விற்கும், மன நிறைவிற்கும், சமூக முன்னேற்றத்திற்கும், அரசியல் சுதந்திரத்திற்கும் அப்பாற்பட்ட புதிய நம்பிக்கையை தருபவராக கிறிஸ்து பிறந்தார். உலகம் தர இயலாத உண்மையான, தளர்வற்ற நம்பிக்கையை அவர் அளித்தார். மீட்பரின் இவ்வுலக வாழ்வு முடிவுற்றபோது "அவர் கூறியது போலவே மீண்டும் வருவார்" (தி.ப 1:11) என்ற

எண்ணத்தில் அவரை மாட்சிமையோடு வரவேற்க திருச்சபை காத்திருக்கிறது.

நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் தான் வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணிகளாகும். நம்பிக்கை இருக்கும் இடத்தில் எதிர்ப்பார்ப்பு இருக்கும். எதிர்பார்ப்பு இருக்கும் இடத்தில் நம்பிக்கை இருக்கும். "இதோ! உலக முடிவு வரை நான் எந்நாளும் உங்களுடன் இருக்கின்றேன்" (மத் 28:20) என்ற இயேசுவின் உடனிருப்பபும், "கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே நிற்கிறீர்கள்? இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததை கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" (தி.ப. 1:11) என்ற வாக்குறிதியும் தான் பணியின் மீதான பற்றுறுதியை திருத்தூதர்களுக்கு கொடுத்தது. "இருக்கிறார்" என்ற நம்பிக்கையும், "வருவார்" என்ற எதிர்பார்ப்பும் எல்லாத்திசைகளிலும் பணிசெய்யத் தேவையான விசையை திருத்தூதுர்களுக்கு கொடுத்தது என்றால் மிகையாகாது. கசையடியும், வசை மொழியும் அவர்களை திசைமாற்ற முடியவில்லை. "அறிவிக்கக் கூடாது: (தி.ப. 4:17-20) என்ற தடையும், அறிவித்ததால் கிடைத்த தண்டனையும் (தி.ப.5:40-41) அவர்களை அடக்கி ஒடுக்கிவிட முடியவில்லை. மாறாக மேலும் வளர்த்துவிட்டதெனலாம்.

கருவறையில் தோன்றி கல்லறைக்குள் மறையும் வரை இந்த மண்ணிலே வாழும் ஒவ்வொரு மனிதனது உள்ளத்தின் ஆழத்தில் உறைந்திருக்கும் ஒவ்வொரு வகையான எதிர்பார்ப்புக்களும் கருவாகி, உருவாகி, உயிருள்ள உணர்வுகள் உயிர்த்துடிப்பாகி, மலர்ந்து இறுதியில் உலர்ந்து மனதைவிட்டு உதிர்வடைந்து விடுகின்றன. வாழ்க்கை எம்முடையதுதான் ஆனால் பல சந்தர்ப்பங்களில் அதன் தன்மை எமக்கே புரிவதில்லை. இதனால் வாழ்வில் எதிர்பார்த்த நிகழ்வுகள் அமையாதவிடத்து வாழ்வை தட்டிக்கழிக்கும் மனநோக்கு எழுவது

இயல்பு. அது தவறு கற்பனையும் கடினவுழைப்பும், தீவிரமான சிந்தனையும், துணிச்சலான செயற்பாடும், இணைந்த எதிர்பார்ப்பில் மலர்வதுதான் வெற்றிகரமானது வாழ்க்கை. கிறிஸ்த்தவர்களாகிய எங்களது எதிர்பார்ப்பு கிறிஸ்துவே. கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு வளமான, புரட்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்ள முனையும் போது, பெரிய ஆபத்துக்களம், பாரிய இழப்புக்களும் ஏற்பட நேர்ந்தாலும்; உரிய நேரத்தில் அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றலை இறைவன் எமக்கு தருவார் என்பதில் ஐயமில்லை.

பல வேளைகளில் நம் வாழ்வின் இருண்ட பகுதியை மட்டுமே நோக்குவதால், ஒளிமிக்க பகுதி ஒன்று உண்டு என்பதையே மறந்து விடுகின்றோம். இருளில் நடந்தாலும் கண்டிப்பாக ஒளி கிடைக்கும் என்ற மனநிலை உருவாக வேண்டும். எத்தனை துன்பச் சுமைகளை நாம் சுமந்தாலும் அதற்கு ஓர் விடுதலையும், மாற்றமும் கிடைக்கும் என நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டும். திருவருகைக் காலத்தில் விசேடமாக இறைவனின் வருகையைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கின்ற இக்காலத்தில் எமது வாழ்வில் இறை நம்பிக்கையையும், இறைவனை நோக்கிய எதிர்பார்ப்பையும் ஆழப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே இக்கால துன்பங்களிலிருந்தும், ஏமாற்றமான வாழ்விலிருந்தும் எமக்கு விடுதலை தரவல்லது.

**அருட் சகோ. றமேஸ் அ.ம.தி**

# பொதுவிடயங்கள்

2007ம் ஆண்டிற்கான ஒஸ்கார் விருதுகள்

சிறந்த படம் - No country for old man

சிறந்த நடிகர் - Danial day lewis

சிறந்த நடிகை - Marion Cotillard

சிறந்த இயக்குனர் - Joel Coens

சிறந்த வெளிநாட்டுப் படம் - The counter feiters

92வது புலிட்ஸர் விரதை வாஷிங்டன் போட் பத்திரிகை வென்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வருடங்கள்

2008 - உருளைக் கிழங்கு வருடம், இயற்பியல் வருடம்,

2009 - ஒத்துணர்வு வருடம்,இயக்குனர் வருடம்

2010 - உயிரின் வேறுபட்ட வருடம்

2011 - வள வருடம்

2008 - ஒலிம்பிக் போட்டிகள்

2008 - ஒலிம்பிக் வாசகம் "ஒரு உலகம் ஒரு கனவு"

பங்கு பற்றும் நாடுகள் 205

பங்கு பற்றும் வீரர்கள் 10,708

பதக்கங்கள் - 302

# இலங்கை வீர வீராங்கனைகள்

சுசந்திக்கா ஜயசிங்க - தடகளப் போட்டி 100m 200m

அநுருத்த ரத்நாயக்கா - குத்துச் சண்டை

ருதீகாலக்மாலி - பெண்கள் ஈட்டி எறிதல்

எதிரிரிங்க எம் சேனநாணக்க துப்பாக்கி சுடுதல்

வாயு பிஸ்டன் 50m ,10m

திலினி ஜயசிங்க - பட்மின்ரன் பெண்கள் ஒற்றையர்

மயூம் ரகீம் -நீச்சல் பெண்கள் 100m

டானியல் வீ - நீச்சல் ஆண்கள் 50m ப்ரீஸ்டைல்

சிந்தள விதானகே - பாரம்தூக்கும் ஆண்கள் 69 kg

தர்ஷிகா பத்மநாதன்

A/L(2011) Arts A

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

# அமைதியின் தூதனாய்

இற்றைக்கு பல நூற்றாண்டுகளிற்கு முன்பு யூதேயாவில் உள்ள பெத்தலகேம் என்னும் ஊரில் அமைதியின் தூதனாகப் பாலக யேசு பிறந்தார். மார்கழியின் கடும் குளிரினில் மாமரி அன்னையின் மடியினில் ஏழ்மையின் உருவெடுத்து அமைதியின் வடிவமாய் அவர் பிறந்தார். அமைதியின் தூதனாகப் பிறந்த பாலக இயேசுவினை “உன்னதங்களிலே இறைவனுக்கு மாட்சியை உண்டாகுக. உலகிலே நல் மனத்தவருக்கு அமைதியும் உண்டாகுக” என்று வானக தூதர் அணியினர் புகழ்ந்து பாடினர். பாவத்தின் தளைகளை அழித்தொழிக்க மானிட வடிவில் பிறந்தவரே அமைதியின் தூதனாகிய பாலக இயேசு.

இன்று இயற்கையின் அழிவுகளினாலும் போரினாலே ஏற்படுகின்ற உயிரிழப்புக்கள் அநியாயப்படுகொலைகள், ஆள்கடத்தல்கள் அங்கவீனமுற்றோர் மிகுந்த சூழலிலே எங்கள் அனைவரையும் பாதுகாத்திட அமைதியின் தூதனே நீ விரைந்திடுவாய். எந்த வேளையிலே என்ன நிகழுமோ என அங்கரலாய்க்கும் எம் மக்கள் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் அமைதியையும் ஆறுதலையும் அளித்திட அமைதியின் தூதனே நீர் மீண்டும் ஒருமுறை எம் மத்தியிலே பிறந்திடுவாய்.

வறுமை ஒழிந்து மக்கள் மனங்களில் நிம்மதி பிறந்திடவும் ஆணவம் ஒழிந்து அமைதி நிலவிடவும் ஏற்றத் தாழ்வுகளை மறந்து ஏமாற்றுப் பேர் வழிகள் திருந்தி வாழ்ந்திடவும் யுத்த பூமியாகிய எம் மண்ணிலே அமைதியும் சமாதானமும் நிலவிட சமாதானத்தின் தேவனே நீ விரைந்திடுவாய். அல்லலுறும் அனாதைக் குழந்தைகள் அனைவரையும் ஆதரவளித்துப் பாதுகாத்திட அமைதியின் தெய்வமாகிய இறைமகன் இயேசு எம்மத்தியிலே பிறக்க அனைவரும் வேண்டிடுவோம். நீதியின் பாதையினைக் காட்டிட அவரருள் இறைஞ்சி வேண்டிடுவோம்.

தே.நிருபனா
யாழ்ப்பாணம்.

# அகதிகள் நாம்

முகாம்களிலே வாழுகின்ற
கண்ணீர்ப் பூக்கள் நாம்
கிண்ணத்தில் கஞ்சி கொஞ்சம்
கிடைக்கு மெனத் தேடுகின்றோம்.

யுத்தத்தின் குண்டு மழை
தாங்க முடியாமல்
வாயில்லாப் பிராணிகளாய்
வந்தடைந்தோம் முகாமிற்கு

எட்டி நடந்து வந்தோம்
இடுப்பிலே கைக்குழந்தை
கட்டிப் பிடித்தபடி
காலடியில் வந்த மகன்

வீடு நெருப் பெரிய
வெந்த உடல் வீதிகளில்
ஓடி வந்தோம் - எம்முடனே
உயிர் ஒன்றே கொண்டு வந்தோம்.

கொட்டில் குடிலுமில்லை
குந்துவதற்கு இடமுமில்லை
கட்டில் கதிரையில்லை
கால் நீட்டப் பாயுமில்லை
என்றோ ஒரு நாள்

காலம் திரும்பி வரும்
கருவானம் வெளிக்கும்
விடி வெள்ளி
நிலவு குளிரும்
நீயும் நானும் நிலைத்துவாழ

தொகுப்பு :- யு. றேக்கா
தரம் 11
யா/ வடமராட்சி இந்து மகளீர் கல்லூரி
பருத்தித்துறை.

# எமக்கு மருந்தாகவும் உவாகவும் பயன்படும் காய்களும் கதிர்களும்

1 பாகற்காய் - நீரிழிவு நோய்கு அருமருந்தாக பயன்டுகின்றது.

2 பூசணிக்காய் -தோல் கண் தொடர்பான நோய்களை குணமாக்கும்

3 நெல்லிக்காய் - நீண்ட ஆயுளைத்தரக்கூடியது இதில் உவர்ப்புத் துவர்ப்பு இனிப்பு ஆகிய சுவைகளைக் கொண்டது.

4 கண்டங்கத்தரி - இருமல், ஆஸ்த்துமா, பொன்ற நோய்களைக் குணமாக்கும்.

5 பப்பாசிக்காய் - அறைச்சிக் கறிக்கு ப்பாசிக்காயைச் சேர்த்தால் இறைச்சி மென்மையடையும். அத்தோடு உடல்வலிமையும், உடற்சூட்டையும் குறைக்கும்.

6 மாதுளை - வாந்தி வயிற்றுப் போக்கு போன்றவற்றை குணமாக்கும்

***கிருஸ்ணகுமார் கிருஷ்சிகா***
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
தரம் 5

வெட்டுக்கவும்

# நுண்ணறிவுப் போட்டி

1) பாலவும், விமலும் சீட்டாடிக் கொண்டிருந்தனர். ஆட்டத்திற்கு ஒரு ரூபா என்று பந்தயம் கட்டிக்கொண்டனர். இறுதியில் மூன்று ஆட்டங்களில் பாலா வென்றான். விமலுக்கும் மூன்று ரூபா கிட்டியது. அப்படியானால் அவர்கள் எத்தனை ஆட்டங்கள் ஆடினர்?

2) ஒரு இலக்கத்தை முறையே 2, 3, 4, 5, 6 ஆல் தனித்தனி வகுத்தால் ஒவ்வொன்று குறைய மீதம் வரும். ஆனால் 7 ஆல் வகுத்தால் மீதம் வராது. அந்த இலக்கம் எது?

3) குறித்த இலக்கத்தை அதே இலத்தால் பெருக்க வரும் எண்களின் கூட்டுத்தொகை அந்த இலக்கத்துக்குச் சமமாக இருக்கும். அந்த குறித்த ஆகக்குறைந்த முழு எண் என்ன?

4) 1 இல் இருந்து 15 வரையுள்ள எண்களால் பிரித்தால் வீதம் வராத எண் யாது?

5) 123, 234, 345, 456, 567, 678, 789 இவைகளில் உள்ள ஒற்றுமை என்ன?

இந்த சஞ்சிகையில் பொது அறிவிற்குப் பதிலாக நுண்ணறிவு இடம்பெற்றுள்ளது. இதற்குரிய விடைகளை இக்கேள்விகளின் பின்புறத்திலேயே எழுதி அனுப்புங்கள்

அதிஷ்டசாலி குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவார்.

**சென்ற இதழின் பரிசிற்குரியவர் க.லபித்திரா, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.**

நுண்ணறிவுப் போட்டிக்குரிய விடைகளை இப்பக்கத்தில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.
(நிழற் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

4) ..........................................................................................

5) ..........................................................................................

நீங்கள் அனுப்பவேண்டிய இறுதித்திகதி 25-02-2010.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

| | |
|---|---|
| அஞ்சலியகம் | Anjali Aham |
| நெல்லண்டை வீதி, | Nellanday Road, |
| தும்பளை, | Thumpalai, |
| பருத்தித்துறை. | Pointpedro. |

"அஞ்சலி" இளையோர்களின் ஆற்றல்களினால் உருவாக்கப்படும் இச்சஞ்சிகையை வளர்க்க உங்கள் காத்திரமான படைப்புக்களையும் விமர்சனங்களையும் எழுதி அனுப்புங்கள் அஞ்சலியின் வளர்ச்சிக்கு உங்கள் அன்பான ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் "அஞ்சலி" அளப்பரிய ஆனந்தம் அடைகின்றது.

"இளையோரே! பெரியோரே!
திரளுங்கள் ஒன்றாக
பேனாமுனை கொண்டு இப் பேருலகை
வெல்வோம்."



Fr.டேமியனின் பிறந்தநாளில்.



அஞ்சலியகம்.
மனித உரிமைகள் விழிப்பூட்டல் நிகழ்ச்சி.



Baloon நடனம்.



மாற்று வலுவுள்ளோருக்கான நிகழ்வில்



மாலை நேரக் கல்வி மாணவர்களுடன்



கணவரை இழந்தோருடன்.



பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன்



சிறுவர்களின் கைவண்ணங்கள்.